Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 31 வெள்ளிக்கிழமை (16.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :294


வன்னியில் விசேடமாக அமைக்கப்பட்ட ஓர் இடத்தில் தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு தேசியத் தலைவர் அஞ்சலி செலுத்திய காட்சி.

## தவறவிடப்பட்ட பட்டதாரிகளுக்கு ஒருமாதத்தில் நிரந்தர நியமனம்

### உறுதிமொழியை அடுத்து போராட்டம் இடைநிறுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம்,செப்.16

அண்மையில் வழங்கப்பட்ட நியமனத்தில் தவறவிடப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரும் அடுத்த ஒருமாத காலப் பகுதிக்குள் நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்படும் - என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவர்களுக்கான நியமனத் தகுதி ஏற்கனவே நியமனம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுடைய நியமனத்தினத்தில் இருந்தே கணிக்கப்படும் என்றும் உறுதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பட்டதாரி ஆசிரிய பயிலுநர்களின் பிரதிநிதிகள், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ந.ராஜநாதன், பொதுச்செயலாளர் ரி. மகாசிவம், யாழ். மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவினர் நேற்று திருகோணமலையில் மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த முடிவுகள் குறித்த உறுதிமொழியை மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். பாலசிங்கம், பிரதம

(16ஆம் பக்கம் பார்க்க)

### நியூயோர்க்கில் ஆசிய சமூகக் கூட்டத்தில் பகிரங்க அறிவிப்பு

# சமஷ்டி முறைக்கு மாறுவதுடன் புலிகளையும் மாற்றவேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா காட்டும் இரட்டை மாற்ற அணுகுமுறை



நியூயோர்க், செப்ரெம்பர் 16

**"இலங்கை நாட்டை ஒற்றையாட்சி முறையிலிருந்து பல்லினத் தன்மையுள்ள சமஷ்டி முறைக்கு மாற்றவேண்டும். எனது கருத்தும் இலங்கையின் பெரும்பகுதி மக்களினதும் கருத்து அதுதான்.**

**"அதேசமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வன்முறையைக் கைவிட்டு நாட்டுடன் சேர்ந்து இயங்கும் அரசியல் சக்தியாக மாற்றவேண்டும்."**

**- இந்த இரட்டை மாற்ற அணுகுமுறையே இப்போது அவசியம் என அடித்துக் கூறுகின்றார் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆசிய சமூக அமைப்பின் பார்க் அவெனியூ தலைமையகத்தில் முக்கிய உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். 'பரந்த சுதந்திரம்: இலங்கையில் அமைதியை

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விசாரணை ஆரம்பம்

### நேற்று நீதிமன்றில் முதனிலை அறிக்கை

கொழும்பு, செப்.16

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விவகாரம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்களை ஆராய்வதற்கு பொலீஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது.

மேற்படி 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான கபீர் ஹாசிம் செய்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் மோசடித் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் ஜயந்த டயஸ் நாணயக்கார முன்னிலையில் மேற்படி

(16ஆம் பக்கம் பார்க்க)

## சோமாலியாவில் கடத்தப்பட்ட கப்பல் விடுவிக்கப்பட்டது

லண்டன்,செப்.16

சோமாலியாவில் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஐ.நா. உணவுக்கப்பல் விடுவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கப்பலின் கப்டனான யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த மகாலிங்கம் மற்றும் கென்யா நாட்டுப் பொறியியலாளர்கள் ஆகியோரும் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருள்களுடன் இந்தக் கப்பல் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி கடற்கொள்ளையர்களால் தடுத்து வைக்கப்பட்டது.

முதலில் குறித்த கப்பலை விடுவிக்க நூறு ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை கடற்கொள்ளையர்கள் கோரியபோதும் பின்னர் கப்பலில் உள்ள 850 தொன் அரிசியை அவர்கள் பணயமாகக் கோரினர்.

இந்த நிலையில் தற்சமயம் கப்பலில் உள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

## எல்லாளன் படை துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம்,செப்.16

குடாநாட்டில் அதிகரித்துவரும் சமுதாயச் சீர்கேட்டு நடவடிக்கைகள் குறித்து மக்களை விழிப்படையச் செய்யும் பிரசுரங்கள் நேற்று பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

'எல்லாளன் படை' என்று அடிக் குறிப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் போட்டி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு கூடிய கூட்டமைப்பின் அரசியல் அதியுயர்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளதாக முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹ்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் குமாரதுங்கவை ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸவே கொன்றார்!

### ரோஹண விஜேவீரவின் மைத்துனர் புதிய குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.16

ஜே.வி.பியின் பெயரை வைத்துக்கொண்டு போலித் தலைவர்களாகச் செயற்படும் சோமவன்ஸ அமரசிங்கவும், விமல் வீரவன்ஸவும் கொலைக்காரர்கள் என்றும், ஜனாதிபதியின் கணவர் விஜேகுமாரதுங்கவை கொன்றவர் சோமவன்ஸ அமரசிங்கதான் என்பதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உண்டு என்றும் அடித்துக் கூறுகின்றார் ஜே.வி.பி. ஸ்தாபக உறுப்பினரும், ரோஹண விஜயவீரவின் மைத்துனருமான (ஜே.வி.பி. முன்னாள் தலைவர் ரோஹண விஜய வீரவின் மனைவியின் சகோதரர்) கலாநிதி சுபாஸ் சந்திர பெர்னாண்டோ. வன்முறைகளற்ற விடுதலைப் பாதையில் ஜே.வி.பி. என்ற அமைப்பின் தேசிய மற்றும் சர்வதேச அமைப்பாளராகவும் அவர் பணியாற்றுகிறார்.

நேற்றுக்காலை கொழும்பு 'நிப்போன்' ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே கலாநிதி பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

1965இல் ரோஹண விஜயவீரவுடன் இணைந்து ஜே.வி.பியை உருவாக்கிய பெருமை எனக்கு உண்டு. எனது சகோதரியின் கணவர் என்ற முறையில் அல்ல. பல்கலைக்கழகத்திலேயே எனக்கும் ரோஹண விஜய வீரவுக்கும் நட்பு ஏற்பட்டது. முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கோரப்பிடியில் இருந்து நாட்டு மக்களை விடுவிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே ஜே.வி.பியை உருவாக்கினோம். எங்களுடைய சொந்த சொத்து, சுகங்களையும் கட்சிக்காக இழந்தோம். 9 வருடங்கள் சிறைத் தண்டனையும், சித்திரவதைகளையும் அனுபவித்தோம்.

உண்மையான ஜே.வி.பி. இன, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. தலைவர் ரோஹண விஜயவீர கொலை செய்யப்பட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவாக....





பல்கலைக் கழகத்தில்....





நல்லூர் நினைவுத் தூபியில்....



...வர் பேரவை அலுவலகத்தில்.... (படங்கள்:- பகீர்)

**இரத்ததானம் உயிர்காக்கும் உன்னத பணி**

# திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் குடாநாட்டில் எழுச்சியுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.16

தியாகி லெப்ரினன்ட் கேணல் திலீபனின்18ஆவது ஆண்டுநினைவு நாள் நிகழ்வுகள் நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் நேற்று எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் எஸ்.சிவராசா தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில், பொதுச்சுடரினை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி க.தேவராசா, நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.பாலகுமார், யாழ்ப்பாண தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சிவஞானசேகரம், மாவீரர் 2 ஆம் லெப்ரினன்ட் சரத்பாபுவின் தந்தையார் க.கந்தசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் ஏற்றிவைத்தார்.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் அணிவித்தார்.

ஈகச்சுடரினை யாழ். மாநாகர சபைச் செயலாளர் திருமதி வசந்தகுமார், அருட்திரு ராஜ்குமார் அடிகளார் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து மலர் அஞ்சலி, அகவணக்கம் என்பன இடம்பெற்றன. தலைமையுரையை அடுத்து சிறப்புரை இடம்பெற்றது.

சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் மா.இளம்பிறையன் ஆற்றினார்.

நிகழ்வின் இறுதியில் நன்றியுரையை நுகர்ச்சி பல நோக்குக் கூட்டுறவு சமாசத் தலைவர் க.கனகலிங்கம் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் மக்கள் பிரதிநிதிகள், பேரவை உறுப்பினர்கள், பல்கலை. மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். இதேவேளை, யாழ். பல்கலைக்கழ கத்தில் நேற்றுக்காலை 9மணிக்குத்தியாகிதிலீபனின்நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் பொ.சிறீதரனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவன் சிவசங்கர் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியினை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். விஜயரூபன் ஏற்றிவைத்தார்.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை கலைப்பீடப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அணிவித்தார்.

ஈகச்சுடரினை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஏற்றிவைத்தார்.

மலர்வணக்கம், அகவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து நினைவுரையைப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் சிறப்புரையை வணிகத்துறைப் பீடாதிபதி க.தேவராஜாவும் நிகழ்த்தினர்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் இ.புவிராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையன் மற்றும் வர்த்தகர் ஒருவரும் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை மாவீரர் 2 ஆம் லெப்ரினன்ட் சரத்பாபுவின் தந்தையார் க.கந்தசாமி ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடர் ஏற்றல், மலர்வணக்கம், அகவணக்கம் என்பனவும் இடம் பெற்றன. (ஐ-12-86-111-30-17)

## மனித உரிமைகள் குழுவிடம் பட்டதாரிகள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த இசைக்கலைமணி மற்றும் நாட்டியக்கலைமணி பட்டதாரிகள் 43 பேர் நேற்றுமாலை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் தனித்தனியே முறைப்பாடு செய்துள்ளனர்.

தொழில்வாய்ப்பற்றிருக்கும் இவர்கள் கடந்த மாதம் நடைபெற்ற வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்கான நேர்முகப்பரீட்சையிலிருந்து தாம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கூறியே இந்த முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இவர்களின் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி றோகித பிரியதர்சன மத்திய அமைச்சின் செயலாளருக்கு இதுதொடர்பான தகவல்களை அனுப்புவதாக உறுதியளித்தார்.

கடந்த திங்கட்கிழமையும் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதே கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக விசாரணை அதிகாரி ரி.சுவேந்திரராஜாவிடம் கையளித்திருந்தனர்.

இந்த மகஜரின் பிரதி ஒன்று அன்றையதினம் யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி இரா.சிவச்சந்திரனிடமும் பட்டதாரிகளால் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## புற்றுநோயாளர் கவனத்துக்கு

குருநகர்,செப்.16

தெல்லிப்பளை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் பழுதடைந்த கோபால்ற் இயந்திரம் தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

எனவே, புற்றுநோய் சிகிச்சை பெறவிரும்பும் நோயாளர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள 26ஆம் இலக்க சிகிச்சைப் பிரிவிற்கு உடனடியாக சமூகமளிக்குமாறு யாழ். பிரதி மாகாணச் சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-51)

## வங்கியாளருக்கு பாராட்டு நிகழ்வு

சங்கானை,செப்.16

மக்கள் வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளர் து.ரகு, வவுனியா பிரதேச முகாமையாளர் கே.ஆனந்தராஜா, வட வலய உதவிப் பொது முகாமையாளர் க.சிவபாதவிருதயர் ஆகியோரைக் கௌரவித்துப் பாராட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் பொன். அச்சுதம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், பளைப் பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ, தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அதிகாரி ச.கைலாயநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (202-29)

* * *

வன்னிப் பிராந்திய முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்ற க.ஆனந்தராசாவுக்கு, மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் இன்று வெள்ளிக்கிழமை பாராட்டு நிகழ்வொன்றை நடத்தவுள்ளனர்.

இவர் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றி பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-202)

## நல்லூர் பெருந்திருவிழா நிகழ்ச்சி ஒளிபரப்பு

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு ரூபவாஹினியின் 'ஐ' அலை வரிசையில் இன்று மாலை 6 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ளது.

ரூபவாஹினியின் உதவிப் பணிப்பாளர் இரா.ரவீந்திரா இதனைத் தயாரித்து வழங்குகிறார். (ஐ-37)

## வரணியில் நாளை மருத்துவமுகாம்

வரணி,செப்.16

வரணி தென்னிந்தியத் திருச்சபையினரின் அனுசரணையுடன் மேற்படி திருச்சபை வளாகத்தில் இயங்கும் பகல் பராமரிப்பு பாலர் கல்வி நிலையத்தில் நாளை சனிக்கிழமை இலவச மருத்துவமுகாம் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் 12.30 வரை நடைபெறும் இந்த மருத்துவ முகாமில் நோயாளிகளுக்கு பெறுமதியான மருந்துவகைகள் இலவசமாக வழங்கப்படும் எனவும் - நோயாளிகள் வருகைதந்து பயன்பெறுமாறும் - வரணி திருச்சபை பங்குத்தந்தை ஜோய் ஜெயரட்ணம் அடிகளார் அறிவித்துள்ளார். (ஐ-9-170)

## பொது நூலகத்தில் நூல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.16

உள்ளூராட்சி வார நிகழ்வின் ஓர் அங்கமாக யாழ். மாநகராட்சி மன்றம் ஏற்பாடு செய்துள்ள புத்தகக் கண்காட்சி ஒன்று இன்று வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை யாழ். மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தொடக்கிவைப்பார். கண்காட்சி இன்றும் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது. (9)

## மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.16

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலிருந்து பல்வேறு போட்டிகளில் தேசிய மட்டத்திற்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா கலந்து கொள்வார். இந்நிகழ்வை லண்டன் பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-202)

## ஆசிரிய மாணவருக்கு பரீட்சைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.16

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஆசிரிய மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைக் கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் மாலை வரை பலாலி ஆசிரிய கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த முன்னோடிக் கருத்தரங்கில் கல்வி தத்துவம், உளவியல் போன்ற பாடங்களுக்குரிய விரிவுரைகள் இடம்பெறவுள்ளன எனவும்-

இதில் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்களை கலந்து கொள்ளுமாறும் - பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கா.சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார். (9-410)




உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இணக்கத் தீர்வுக்கு இடுக்கண் இது

*'தெற்கில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. பெரும்பான்மையினரான சிங்களவர்களையும் நாம் முதலில் திருப்திப்படுத்தியாகவேண்டும். அதுவே முதல் வேலை. அவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் தீர்வு முயற்சியில் நாம் முன்னோக்கிச் செல்லவே முடியாது. அதனைப் புலிகளும் புரிந்துகொள்ளவேண்டும்.'*

- இவ்வாறு கூறியிருக்கின்றார் பிரதமரும், ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ.

அண்மைக் காலமாகத் தாம் எடுத்துவரும் நிலைப்பாட்டுக்கு - நடவடிக்கைகளுக்கு இவ்வாறு விளக்கம், வியாக்கியானம், காரணம் என்பன கூற முயல்கிறார் பிரதமர். கடும்போக்குடைய சிங்கள, பௌத்த தீவிரவாத சக்திகளுடன் தாம் அணி சேர்வதற்கு இத்தகைய விளக்கத்தை அவர் அண்மைக் காலத்தில் தம்மைச் சந்தித்து வரும் முக்கிய பிரமுகர்களுக்குக் கூறிவருவதையும் அறிய முடிகின்றது.

தீர்வு முயற்சிக்கு முன்னோடியாக பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அனைவரையும் - தென்னிலங்கைச் சக்திகள் அனைத்தையும் - தமக்குப் பின்னால் அணி திரட்டுவதற்காகவே இத்தகைய கொள்கைப் போக்கைத் தாம் கடைப்பிடித்து வருகின்றார் என்று 'சமாளிப்பு' கூறமுயல்கின்றார் அவர்.

அவரது இந்த செயற்பாடு 'குளிக்கப்போய் சேறு பூசிக் கொண்டதற்கு' ஒப்பானதாகும்.

பேரினவாதத்தின் பின்னால் மறைப்பு எடுப்பதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று விடலாம் என நப்பாசை கொண்டிருக்கும் பிரதமர், அதற்காகத் தான் செய்யும் சந்தர்ப்பவாத அரசியலுக்கு பொருத்தமற்ற விளக்கம் கொடுத்து சமாளிக்கப் பார்க்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு சகல தரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான இணக்கத் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு, பெரும்பான்மையினரிடத்தே இணக்கப்பாடு ஒன்றை உருவாக்குவது அவசியமானது என்பதை எல் லோருமே ஏற்றுக்கொள்வர். அது நியாயமானதுதான்.

ஆனால், இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தமிழர் தரப்பின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யாத எந்தத் தீர்வும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதும், அத்தகைய தீர்வு எதுவும் நின்று, நிலைத்து நீடிக்கமாட்டாது என்பதும் கூட வெள்ளிடைமலை.

தமிழர்களின் நியாயமான - கைவிடவே முடியாத- அவர்களின் அபிலாஷைகளை அடியோடு நிராகரித்துப் புறம் ஒதுக்குகின்ற வகையில், அத்தகைய கடும்போக்கை முன்னிறுத்தி - அவற்றின் அடிப்படையில் பௌத்த, சிங்கள மேலாண்மைவாதிகளைத் தமக்குப் பின்னால் அணி திரட்டும் பிரதமர், அத்தகைய அணியை வைத்துக் கொண்டு அமைதித் தீர்வு காண்பேன் என்று கூறுவது இலங்கை மக்கள் அனைவரினதும் காதில் பூச்சுற்றும் வேலையேயன்றி வேறில்லை.

பிரதமர் என்ற உயர்பதவி நிலையையும் ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்ற மேன்மை ஸ்தானத்தையும் தம்வசம் வைத்துக்கொண்டு, அந்த அந்தஸ்தை உபயோகித்து, ஜனாதிபதித் தேர்தல் என்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இதுவரை நாலாபுறமும் சிதறிக் கிடந்த பேரினவாதிகளை தமக்குப் பின்னால் ஒன்று திரட்டுகின்றார் பிரதமர்.

அதுமட்டுமல்ல, தமிழர்கள் ஒரு தேசிய இனம் அல்ல அவர்களுக்குத் தனியான தாயகம் ஏதும் இலங்கைத் தீவில் இல்லை. அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை என்று எதுவும் கிடையாது, எந்தத் தீர்வும் ஒற்றையாட்சி முறைக்குள்தான் பரிசீலிக்கப்பட முடியும். ஆயுதக் களைவோடு தான் புலிகளுடன் பேச்சு - என்பன போன்ற சாத்தியப்பாடற்ற, யதார்த்த பூர்வமற்ற, விவரீதமான அம்சங்களை எழுத்தில் ஒப்புக்கொண்டு, இந்தக் கருத்து நிலைப்பாடுடன் இதுவரை தென்னிலங்கையில் பல்வேறு துண்டுகளாகச் சிதறிக் கிடந்த பேரினவாத சக்திகளைத் தட்டி விழிக்கச்செய்து, கட்டி எழுப்பி, தன்னை மையமாக வைத்து ஒன்றுபடுத்தி, தூக்கி நிறுத்து கிறார் பிரதமர் மஹிந்த.

இணக்கத் தீர்வுக்கும், அதற்கு வழிசெய்யும் அமைதிப் பேச்சுக்கும் இடைஞ்சல்களை ஏற்படுத்தக்கூடிய பேரினவாதிகளைத் தமது தேர்தல் வெற்றி என்ற சுயலாப அரசியலுக்காக ஓரணி சேர்க்கும் பிரதமர், அமைதித் தீர்வுக்குச் சிங்களவர்களை ஒன்றுதிரட்டும் முயற்சி என அதை சித்திரிக்க முயல்கிறார்.

அமைதித் தீர்வுக்கான வாய்ப்புகளை அடியோடு அழிக்கும் விடயங்களின் அடிப்படையில் பேரினவாதிகளை ஐக்கியப்பட வைக்கும் பிரதமர், தீர்வுக்கு வசதியாகப் பெரும்பான்மையினரை ஒன்றுபடுத்தி இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவர வைக்கிறேன் என அதற்கு விளக்கம் கூற முற்படுவது குளிக்கப் போய் சேறு பூசும் வேலையன்றி வேறென்ன?

இது தீர்வுக்கு வழிசெய்யும் நடவடிக்கை அல்ல. இணக்கத் தீர்வுக்கு இடுக்கண் ஏற்படுத்தும் சதிச் செயற்பாடாகும். நாட்டைக் கொடூர யுத்தத்தின் பால் விழ வைக்கக்கூடிய இனமுரண்பாட்டைத் தீவிரப்படுத்தும் நடவடிக்கையாகும்.

# தமிழர் விருப்பினை உலகம் அறிய பொங்குதமிழில் அணி திரள்வோம்!

## பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் அறைகூவல்

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்.குடாநாட்டில் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி எம் மக்களின் உள்ளக் கிடக்கையை உலகிற்கு உரத்துக் கூற நாம் அனைவரும் ஒன்று திரள்வோம்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது விவசாயபீட மாணவர் ஒன்றியம்.

வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தும் வகையில் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டு மக்கள் இணைந்து இந்த எழுச்சிநிகழ்வை நடத்த உள்ளனர்.

இதுதொடர்பாக யாழ். பல்கலைக் கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக சமூகம் நடத்தும் பொங்குதமிழ் நிகழ்விற்கு அனைத்து மக்களும் அணிதிரண்டு வந்து எமது ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்.

காலம்காலமாய் எமது மக்களின் அடிமனதில் புதைந்து கனன்று கொண்டிருக்கும் எமது உரிமைக் குரலை உலகிற்கு உரத்துக் கூறுவோம்.

வவுனியா பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக - எமது நீண்டநாள் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையை உறுதிப்படுத்தும் விதமாக - அனைவரும் அணிதிரள்வோம்.

இந்நிகழ்விற்கு ஆதரவாக உங்கள் பிரதேசங்களை சிவப்பு, மஞ்சள் வர்ண கொடிகள், பதாகைகள் கட்டி அலங்கரித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சமாசங்கள், விவசாய சம்மேளனங்கள், மதரீதியான ஸ்தாபனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள், ஆசிரிய கலாசாலை, கல்வியியல் கல்லூரி மாணவர் ஒன்றியங்கள், சனசமூக நிலைய அமைப்புகள், கிராம முன்னேற்ற அமைப்புகள் என அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணைந்து குடாநட்டில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டும் உங்கள் ஆதரவைப் பத்திரிகைகள் வாயிலாக அனைத்து மக்களுக்கும் 'பொங்கு தமிழ்' பற்றி அறியத்தந்து அணி திரட்டுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

(ஒ-202)

# யாழ். மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டது

## தெற்கில் இணக்கம் ஏற்பட்டதை அடுத்து

யாழ்ப்பாணம்,செப்.16

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரிவினர் நேற்று முதல் நடத்தவிருந்த வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

சம்பள முரண்பாடுகளை சீர்செய்யக் கோரி பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த ஒருவாரகாலமாக வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியிருந்தது. இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே யாழ்.மாவட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்திருந்தனர்.

எனினும், வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்ததை அடுத்தே யாழ்.மாவட்ட உதவி வைத்தியர்களும் தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட சங்கத்தின் செயலாளர் டாக்டர் க.திரு ஞானசம்பந்தமூர்த்தி தெரிவித்தார். (3-9)

## உதயவாக்கு

*நல்லவற்றைப் பாறையில் எழுதி வை. தீயவைற்றைப் பனிக்கட்டியில் எழுதி வை.*

- ஓர் அறிஞர்.

## நாளை

*புரட்டாதி 1*
**சனிக்கிழமை**
17.09.2005
**திதி: சதுர்த்தசி**
**முற்பகல்: 10.36 வரை**
**நட்சத்திரம் : சதயம்**
**பிற்பகல் )2.02வரை**
**சுபநேரம் : 03.03 - 04.33**
**ராகுகாலம்: 09.03 - 10.33**
**(யாவும் பழைய நேரப்படி)**

# தென்மராட்சியில் 'யானை'

யாழ்ப்பாணம்,செப்.16



தென்மராட்சியில் குறிப்பாக சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் யானைக் கூட்டப் படம் அடங்கிய சுவரொட்டிகள் அதிக எண்ணிக்கையில் ஒட்டப்பட்டுள்ளன. பச்சை வர்ணத்தில் அச்சிடப்பட்டுள்ள இந்த சுவரொட்டியில் பொய் வாக்குறுதியல்ல மக்களின் விருப்பில் தான் வெற்றி என்ற வாசகமும் காணப்படுகிறது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ள இச்சுவரொட்டியில், யாரால் வெளியிடப்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை.

பச்சை வர்ணமும், யானைச் சின்னமும் ஐ.தே.கட்சிக்குரியவை என்பதால் இந்தச் சுவரொட்டிகள் ஐ.தே.கட்சி சார்பில் வெளியிடப்பட்டி ருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ இனவாத ஜே.வி.பி., ஹெலஉறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற ஒப்பந்தம் செய்துள்ளார். அதனைப் பயன்படுத்தி தமிழ் மக் களின் வாக்குகளைப் பெற ஐ.தே.கட்சி முயற்சிப்பதன் அறிகுறியே இந்தச் சுவரொட்டி என்று பொதுமக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

1994ஆம் ஆண்டு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றே சந்திரிகா ஜனாதிபதியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

# நோர்வேத் தலைவருக்கு ரணில் வாழ்த்து

நோர்வே பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராக நியமனம் பெறவுள்ள நோர்வே தொழிற்கட்சித் தலைவர் ஜோன்ஸ் ஸ்டோல்டன் போக்கிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஸ்டோல்டன் போர்க்குடன் தொலைபேசி மூலம் உரையாடியிருக்கும் ஐ.தே.க. தலைவர், இலங்கையின் அரசியல் நிலைமை குறித்தும் கருத்துப் பரிமாற்றம் செய்திருக்கிறார்.

நோர்வேயில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் இலங்கையின் அமைதி முயற்சிகளைத் தளரவிடாமல் நோர்வே முன்னெடுக்க வேண்டுமென ஐ.தே.க. தலைவர் இந்த உரையாடலின்போது கேட்டுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-3)





தற்போது A/L எடுத்த மாணவர்கள் மற்றும்...

# SAAMSTECH இன் இரண்டாவது

# இலவச நேரடி வகுப்பு

இடம் : ரிம்மர் மண்டபம், யாழ் மத்திய கல்லூரி அருகில்

காலம் : 17.09.2005 சனிக்கிழமை

நேரம் : 9.00 - 11.00, 11.00 - 1.00, 2.00 - 4.00, 4.00 - 6.00

கடந்த மாதம் 19 மற்றும் இம்மாதம் 10ஆம் திகதிகளில் இடம்பெற்ற முதல்வகுப்பில் கலந்துகொண்டோர் இவ்வகுப்பில் கலந்துகொண்டு 13 முதல் 24 வரையான அலகுகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்

இப்பாடநெறிக்கான இலவச அனுமதி நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இவ்வகுப்பில் புதிதாக கலந்துகொள்வோர் இப்பாடநெறிக்கு இலவசமாக தம் பெயர்களை பதிவுசெய்யலாம்

**இப்பாடநெறிக்கு பதிவுசெய்வோருக்கு அனுமதி, 60 பாட அலகுகள், பரீட்சை, மற்றும் சான்றிதழ் வரை முழுமையாக இலவசம்**

யார் இந்த இலவச பாடநெறியில் கலந்துகொள்ளலாம் ?

கணினியாளர்

அலுவலர்கள்

மாணவர்கள்

விரிவுரையாளர்

ஆசிரியர்கள்

வெளிநாட்டு செல்வோர்

**SAAMSTECH இன் புதிய முறையிலான முப்பரிமாண ஆங்கிலக் கற்பித்தல்**

இதுவரை வழக்கத்திலுள்ள இலக்கண ரீதியான கற்பித்தல் இலக்கணரீதியான வசன உருவாக்க சிந்தனையினை ஏற்படுத்துவதால் கதைக்க முடியாத நிலை ஏற்படுத்தப்படுகிறது. வசனம் மற்றும் உரைநடை மூலமான பயிற்சி புரிந்துகொள்ளமுடியாத தன்மையினைக் கொண்டது. SAAMSTECH இன் புதியமுறைக் கற்பித்தலானது 1 - அடிப்படை வசன உருவாக்கத்திறன் மற்றும் வேகம், 2 - அன்றாட வசனங்களின் பழக்கப்படுத்தல், விருத்தியாக்கம், சொல்வளம் 3 - உயர்பாவனைக்கான பிரயோகங்கள் என்ற முப்பரிமாண முறை மூலமாக சில நாட்களில் ஆயிரக்கணக்கான வசனங்கள் பழக்கப்படுத்தப்பட்டு சொல்வளமும் விருத்தி செய்யப்படுவதால் சில நாட்களிலேயே ஆங்கிலத்தினை சரளமாக கதைக்க முடியும். ஆங்கிலமூலமாக எந்தவொரு செயற்பாட்டிலும் பணியாற்ற முடியும்.



சர்வதேச தரத்தில் சான்றிதழ்வரை

**SAAMSTECH இன் ஆங்கிலக் கற்பித்தல் இந்த தலைமுறையின் வரப்பிரசாதம்**

## மற்றும் அனைவரும்



**PSALMS TECHNOLOGIES PVT LTD**

198, Galle Road, Dehiwala. 841, Hospital Road, Jaffna
233/4, Kasthuriyar Road, Jaffna. 021 - 4591571, 0773068968



**DIPLOMA IN COMPUTER HARDWARE CLASSES**

GROUP CLASSES

10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

எமது நிறுவனத்தில்

**DIPLOMA IN COMPUTER HARDWARE**

வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.

Motherboards and Processors, Rams, Power supply units, Hard disks, Floppy drives, Data cables & Ports, Computer Monitors, Key boards, Mouse, Video cards, Sound cards, Internal & External Modems, Multimedia devices, Network cards, Computer tool kits UPS system, Digital Multi-meter, Operating system, Application software and drivers, All through Assembling, Troubleshooting, Installation & Configuration.

Start : 17 - 09 - 2005 9.00 a.m

Fees :- 2000/= Duration 4 Months

**C.B Computer Academy**

T.P No. 021- 4590291 Station Road, Kondavil.



**eTouch COMPUTER SYSTEM**

"The right way to touch IT"

அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**80% OFF**

| | |
|---|---|
| INTERNET & E-MAIL | 1,000/= |
| OFFICE AUTOMATION<br>DESKTOP PUBLISHING<br>PHOTO MIXING<br>PROGRAMMING<br>HARDWARE | 1,500/= |
| HIGHER DIPLOMA IN AUTOCAD (New South Wales University Syllabus & Handouts) | 3000/= |
| MULTIMEDIA | 3,500/= |

ஆரம்பம்: 17, 18, 24, 25 -09-2005

மானிப்பாய் வீதி, மருதனார்மடம்

021-4590222 etouch@wow.lk



# பாராட்டு விழா


## மென்மேலும் உயர மனமார வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கிச்சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச்செல்லும்
**உயர்திரு.க.சிவபாதவிருதயர்** அவர்களுக்கும்
(உதவிப் பொது முகாமையாளர், வடவலயம்)



மக்கள் வங்கியின் யாழ்ப்பாண உதவிப் பிரதேச முகாமையாளராகக் கடமையாற்றிப் பிரதேச முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று வன்னிப் பிரதேசத்திற்கு மாற்றம் பெற்றுச்சென்றுள்ள
**உயர்திரு.கே.ஆனந்தராஜா** அவர்களுக்கும்
(பிரதேச முகாமையாளர், வன்னிப் பிரதேசம்)



மக்கள் வங்கியின் யாழ்ப்பாண உதவிப் பிரதேச முகாமையாளராகக் கடமையாற்றிப் பிரதேச முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற
**உயர்திரு.து.ரகு** அவர்களுக்கும்
(பிரதேச முகாமையாளர், யாழ்ப்பாணப் பிரதேசம்)

சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்களால் இன்று (16-09-2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சங்கானை வலி. மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் வங்கி முகாமையாளர் திரு.பொன் அச்சுதம்பிள்ளை அவர்களின் தலைமையில் பாராட்டு விழா நடைபெறுகின்றது.
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(40028) (24-11-47)

**மக்கள் வங்கி, சங்கானை.** முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள்.



நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட எழுச்சிநிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிஷோர், செ.கனகரட்ணம், ப.அரியநேந்திரன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரின் ஆசிச் செய்தியை எடுத்துவந்த அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மாவீரர் மேஜர் பசிலனின் தாயார் ந.தங்கம்மா பொதுச்சுடரையும், ஏற்பாட்டுக்குழுவினர் எழுச்சிச் சுடர்களையும் மாவீரர் மாறனின் தந்தை செ.சின்னத்துரை தேசியக் கொடியையும் ஏற்றுகின்றனர்.





உரிமையைப் பெறுவதற்காக உயிராயுதமாகத் துணிந்த மக்களின் உள்ள எண்ணங்களை வெளிப்படுத்தும் காட்சிகள்.

படங்கள்: தேவா, கவிதரன்.

# தொடர்ந்து பேச்சு நடத்துவதில் பயனேதும் இல்லை தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவதே ஒரேவழி

## எழுச்சி நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

– உதயன் புதுக்குடியிருப்புச் செய்தியாளர் மு.விக்னேஸ்வரன்–

முல்லைத்தீவு, செப்.16

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்வுகாண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பல்வேறு வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டது. தற்போதும் மேற்கொண்டுவருகின்றது. ஆயினும் பேச்சுகள் எல்லாம் வெறும் பேச்சளவுடன் முடிவடைந்துவிடுகின்றன. அந்தப் பேச்சுகளில் எடுக்கப்படும் முடிவுகள் எதுவும் இலங்கை அரசினால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

ஆகவே, இனிமேல் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதன் மூலம் எமக்குப் பயனேதும் கிடைக்கப்போவதில்லை. அனைவரும் ஒன்றிணைந்து தேசியத்தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவதே தீர்வுக்கு ஒரே வழி.

இவ்வாறு தெரிவித்தார் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்.

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் சிறப்புரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். இதன் பின்னர் எமது நட வடிக்கைகளில் மாற்றங்கள்செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகப் பேசுவதற்கு அரசு தயாராக உள்ளது என்ற செய்தி வந்தது.

ஆனால், அந்தப் பேச்சுகளை எங்கு நடத்துவது என்ற சர்ச்சை இப்போது ஏற்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகள் சரியான - நேர்த்தியான - முறையில் தமது அரசியல் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை இப்போது எழுந்துள்ளது. இதனால்தான் அந்தப் பிரதேசங்களிலிருந்து அரசியல் போராளிகள் வெளியேறியுள்ளனர்.

இந்தநிலையில்தான், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் திருத்தம் கொண்டுவருவது தொடர்பாகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பேச்சுநடத்த வருமாறு புலிகளை அழைத்துள்ளது.

எமது போராட்டம் சர்வதேச மயப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே அரசு உள்நாட்டிலேயே பேச்சுகளை நடத்த வேண்டும் என்பதில் குறியாக உள்ளது.

ஆயினும், நாம் இன்று ஓர் உண்மையைப் புரிந்துகொண்டிருக்கின்றோம். பேச்சுகள் அனைத்தும் வெறும் வாய்ப்பேச்சளவில் மட்டும்தான். அவை செயல் வடிவம் பெறுவதில்லை. எனவே, இனிமேல் பேச்சுகள் எந்த விதமான ஆக்கபூர்வமான பயனையும் தரமாட்டா என்பதை நாம் உணந்துள்ளோம்.

எமது விடுதலையை நாமே வென்றெடுக்க வேண்டிய தேவைப்பாடு இப்போது எழுந்துள்ளது. அந்தக் கடைசிக் கட்டத்துக்கு நாம் வந்துள்ளோம்.

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் நாம் பெற்றது என்ன? சர்வதேசம் எமக்கான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் நாம் கடந்த 3 வருடங்களாகப் பொறுமை காத்துவருகின்றோம். ஆயினும் எமக்குப் பலனேதும் கிடைக்கவில்லை. மாறாக இழப்புக்களையே நாம் சந்திக்கின்றோம். தனித்துவமான கொள்கையுடன்போராடி எமது தலைவரின் சிறந்த வழி காட்டலில் வெற்றிகள் பலவற்றைப் பெற்றோம். அதுக்குத் தமிழ் மக்களாகிய நீங்கள் எமக்குப் பக்கபலமாக நின்றீர்கள்.

யுத்தத்தை நிறுத்திவிட்டுப் பேச்சுக்குச் சென்ற எங்களை இப்போது யுத்த உடன்படிக்கை பற்றிப் பேசுவதற்கு அழைக்கின்றார்கள். பாருங்கள்நிலைமை எப்படிப் போகிறதென்று.

இனியும் பொறுமைகாக்க முடியாது. எனவே, எமது இலட்சியப் பயணத்தை நாம் மீண்டும் தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். இந்த இலட் சியப் பயணம் என்ன என்பது தமிழ் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். ஏனெனில், அதன்மூலம் நாம் சாதித்துக்கொண்டவை ஏராளம்.

எம் இனிய தமிழ் மக்களே! எல்லோரும் எமது தலைவனின் பக்கத்தில் வாருங்கள். எல்லோரும் இணைந்து எமக்கான சுயநிர்ணய உரிமையை நாமே போராடிப் பெற்றுக்கொள்வோம். இந்தச் செய்தியைச் சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறுவதாக இந்த எழுச்சி நிகழ்வு அமையட்டும் - என்றார்.

(எ-8-13-341-351-352-353)

# தேர்தலில் யார் வெற்றி பெறினும் எமக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காது

## திருமலை மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன்

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறினும் தமிழருக்கு நிரந்தரத் தீர்வு எதுவும் கிடைத்துவிடாது. எனவே, எங்கள் விடுதலையை நாங்களே தீர்மானிக்கும் சக்திகளாக அணிதிரளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன்.

நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தாயகக் கனவுகளைச் சுமந்து விடுதலைப் போரில் மடிந்து கல்லறைகளில் உறங்கிக்கொண்டிருக்கும் மாவீரச் செல்வங்கள் இன்று எங்களைப் பார்த்து கையசைத்துக் கொண்டிருக்கின்றன. என்ன செய்கிறீர்கள். ஏன் பொறுமை காக்கிறீர்கள்!என்று அவர்கள் கேள்வி கேட்கின்றார்கள்.

கிளிநொச்சியில் பிறந்த போராளி யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத்தில் பிறந்த போராளி மட்டக்களப்பிலும் என்று எமது மாவீரர்கள் கல்லறைகளில் உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கண்விழித்துப் பார்க்கின்றபோது நாம் என்ன செய்தியைச் சொல்லப் போகின்றோம் என்று சிந்தித்துப் பாருங்கள்.

அன்பான மக்களே! நாங்கள் தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டோம். திருகோணமலையில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலீஸ் அத்தியட்சகர் என்னை விசாரணைக்கு அழைத்து ஒரு கேள்வி கேட்டார். 'உங்கள் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னால் எத்தனை பேர் உள்ளீர்கள் என்று. அதற்கு நான் என்னுடன் சேர்த்து 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் உள்ளனர்.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல மலையத்தில் வசிக்கின்ற தமிழ் பேசும் மக்களும் விடுதலைப் புலிகளின் பாதையில் திரண்டு விட்டோம் என்று கூறினேன்.

இந்த நிலையில் தென்னிலங்கை அரசுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறோம். ஜனாதிபதித் தேர்தலைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். தென்னிலங்கை அரசியலில் எந்தக் கட்சியென்றாலும் அது இனவாதக் கட்சிதான்.

ஒன்று கருநாகம் என்றால் மற்றையது கொம்பறிமூக்கன். இதில் ஒன்று சிவப்பு தலைப்பாகை போட்டுள்ளது மற்றது பச்சைத் தலைப்பாகை போட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்தால் நல்லது என்று சிலர் எண்ணுகின்றனர். அந்த ரணிலின் ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் தமிழ் மக்கள் மீது அக்கிரமங்களும் திணிப்புகளும் அதிகம் நடந்துள்ளன.

தென்னிலங்கை அரசியல் எவ்வாறாயினும் இருந்து விட்டுப் போகட்டும். தென்னிலங்கையில் உள்ள இனவாதக் கும்பல்கள் எல்லாம் தமிழினத்தை அழிக்கவென ஒன்று திரண்டு நிற்கின்றன.

சிங்கள மக்களே! ஒன்றை மட்டும் நிதானித்துச் செயற்படுங்கள். இந்தத் தேசம் ஒன்றாக இருக்க வேண்டுமா? அல்லது இரண்டாக இருக்கவேண்டுமா? என்று சிந்திக்க வேண்டியது சிங்கள மக்களே. அப்படி சிந்திக்கத் தவறி சிங்களப் படைகளைப் பயன்படுத்தித் தமிழ் மக்களை அழிக்க நினைத்தால் அது ஒரு போதும் நிறைவேறாத காரியம் என்பதை இந்த வீரம் செறிந்த முல்லை மண்ணில் நின்று சொல்லிவைக்க விரும்புகிறேன் - என்றார்.

(எ-13-353)

## சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார விழா

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நகர சபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை, யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வி.இராசையா, தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி ஆக்கப்பட்ட சிறப்புமலர் வெளியீடும், உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில் வழங்கலும் -

சபை உத்தியோகத்தர்களின் வில்லிசை, பண்ணிசை, பரதநாட்டியம், விவாத மேடை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-31-117)

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்



அமரர் பொன்னம்பலம்
பகீரதன் (பகு)

அன்னை மடியில் 26 - 03 - 1970 இறைவன் அடியில் 09 - 09 - 2003

திதி: 16.09.2005
(வெள்ளிக்கிழமை)

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் சிகரமாய் குறுகாலம் வாழ்ந்த
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் எம்மைவிட்டு மறையாது.

அந்தனத்திடல்,
கரவெட்டி. (40005) (38-11-45-24) - குடும்பத்தினர்.

## ஒத்துமாறல்

வவுனியா தேசிய பாடசாலைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஒத்துமாற விரும்பும் பட்டதாரிகள் (ஆரம்பக் கல்வி) கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

(சி/45120) (24-11-45) T.P.: 0777 222625

## வீடு, காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதி, பெரிய மாவடி, உளுத்தம்புலம் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் வீடு, கிணறு, பயன்தரு மரங்கள் அடங்கிய 15 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: இ.சிவானந்தன்,
நகரசபை, சாவகச்சேரி.

(சி/45110) (26-11-45-24) T.P.: 0779587057

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**aat (SriLanka)**

Foundation level, Intermediate level & Final Exam:-Jan. 2006

ஆரம்பம்:-17.09.2005(saturday)

Medium :- English & Tamil

வார நாள் வகுப்புகள், வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

Further Details
Director
Jaffna College Undergraduate Dept.,
464, Hospital Road,
(Near Commercial Bank) Jaffna.
T.P. No.: 021 222 3382

(சி/44995) (26-11-45-24)


HONDA Come ride with us

இதோ! முற்றிலும் புதிய


SUPER Splendor

BREAK THROUGH 3 YEAR or 40,000 Km WARRANTY

சிறந்ததை விட
3 மடங்கு தரமானது



QUANTUM CORE ENGINE



புதிய புரட்சிகரமான குவான்டம் கோர் என்ஜின் என்பது, செயலாற்றலின் வழியலகிற்கு புதிய பரிமாணம் படைத்தது. ஒரு என்ஜினின் சிறப்புக்களை மாத்திரம் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் நீண்ட ஆயுட்காலம் எமக்கு உறுதி. எனவேதான் எமது உத்தரவாத காலம் 3 வருடங்கள். இப்போது, பார்ப்போம் இதற்கு நிகர் நிற்க எவர்க்கு முடியும் என்று...

- 125சிசி
- 4 ஸ்ட்ரோக்
- கிக் மற்றும் சுய ஸ்டார்ட்
- டிஸ்க் மற்றும் ட்ரம் பிரேக்

Free Jacket & Helmet

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்
STAFFORD
MOTOR CO. LTD.
ஸ்டப்பட் மோட்டார் கோ. லிமிடட்

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

ஹொட் லைன் 5340034

718/7, மருதானை வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 4607200 பெக்ஸ்: 2697423
மோட்டர் சைக்கிள் கொம்ப்ளெக்ஸ் 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவை. தொ.பே.: 4303510


### வவுனியா - கற்குழி
அருள்மிகு
### வீரமங்கள ஆஞ்சநேயர் ஆலயத்தில்
## குருப்பெயர்ச்சி ஹோமம் - 2005

**ஆஞ்சநேய அடியார்களே!**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் புரட்டாதி மாதம் 3ஆம் நாள் 19.09.2005 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனை நடைபெற்று, குருப்பெயர்ச்சி ஹோமம் நடை பெறும்.

குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப குருப்பெயர்ச்சி அனைத்து ராசிக்காரர்களின் வாழ்விலும் மாறுதல்களை ஏற்படுத்துகின்றது. அவ்வகையில் நன்மைபெறும் ராசிக்காரர்கள் மேலும் நன்மை பெறவும் பாதிக்கப்படும் ராசிக்காரர்கள் பரிகாரம் பெற்று, வாழ்வில் துன்பங்கள் குறைந்து, நன்மை அடையவும் குருப்பெயர்ச்சி ஹோமம் நடைபெறுகின்றது.

**குருப்பெயர்ச்சியால் பாதிக்கப்படும் நட்சத்திரங்கள்:-**

இடப ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
கார்த்திகை 2ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம்
சிங்க ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்
துலாம் ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
சித்திரை, சுவாதி, விசாகம்
விருச்சிய ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை
மீன ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி
கடக ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்
மகர ராசிக்குரிய நட்சத்திரங்கள் :-
உத்தராடம் 2ஆம் பாதம், திருவோணம்,
அவிட்டம் 2ஆம் பாதம்

*குருப்பெயர்ச்சியால் பாதிக்கப்படும் நட்சத்திரக்காரர்கள் ஹோமத்தில் கலந்து கொள்ளவும் குருப்பெயர்ச்சி தோஷ நிவர்த்தி நூல் பெறவும் 18-09-2005 மாலை 6 மணிக்குமுன் ரூபாய் 100/= செலுத்தி பெயர்களைப் பதிவுசெய்யவும்.*

அடியார்கள் ஆலயவளர்ச்சிக்குப் பணம், பொருள் உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.

வீரமங்கள ஆஞ்சநேயர் ஆலயம்
கற்குழி - வவுனியா
024- 2220071

க.உ. தயாசங்கர்சர்மா
பரிபாலகர்

(சி/45112) (26-11-45-24)

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 16 - 10 - 1942



மறைவு 18 - 08 - 2005


### திருமதி விநாயகமூர்த்தி பரமேஸ்வரி

அருந்தவங் கிடந்து பெற்று அறிவூட்டி ஆளாக்கி
வரும் புகழின் வித்தாகி வாழ்வாங்கு வாழவைத்த
பெருந்தவத்து நாயகியே பெயரொளிரும் எம் அம்மா....!
வருந்தியழ வைத்துநின்று வான் விருந்தாய் ஆகிவிட்ட
திருந்திழையே உங்களது தெய்வீகப் புகழ் தொடுத்து
அரும்புகழ்ப்பா மாலையிதை அடிபணிந்தும் திருப்பாதத்தில்
உருக்கமொடு ''படையல்'' செய்தோம்!
உவப்புடனே ஏற்றருள்க!

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (39851) (24-11-45) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 01 - 01 - 1923



ஆண்டவன் அடியில் 17 - 08 - 2005

### அமரர் சின்னப்பு முருகேசு
(பொலிசர்)

திதி: 16.09.2005

மாதம் ஒன்று ஆனது - அப்பா!
நீங்கள் மரணித்து
வஞ்சமில்லா நெஞ்சத்தவரே!
அம்மாவுடனும், அன்புத் தம்பியுடனும்
வாழவா? எமைவிட்டுப் பிரிந்தீர்?
காலமெல்லாம் உங்களை நினைந்து கலங்குகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*இன்று (16.09.2005) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பருத்தியோலை,
கந்தரோடை,
சுன்னாகம். (40020(32-11-45-24) - குடும்பத்தினர்.

# பிரதமர் - ஜே.வி.பி. உடன்படிக்கையால் பொருளாதாரம் சரிந்து நாடு குட்டிச்சுவராகும்

## முன்னாள் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கிறார்

கொழும்பு,செப்.16

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் எட்டாவது பிரிவு நாட்டின் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கிவிடும். இது திறந்தபொருளாதாரக் கொள்கைக்கு வேட்டு வைக்கும். இவர்களால் தனியார் துறையில் பணிபுரியும் பல மில்லியன் ஊழியர்களினதும் அவர்களை அண்டியிருப்பவர்களினதும் எதிர்காலம் சூனியமாக்கப்பட்டுவிடும்.

- இப்படி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி நிதியமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகள் தடைப்படும். ஏற்றுமதி, இறக்குமதி மட்டுப்படுத்தப்படும். அத்தியாவசியப் பொருள்களுக்கு அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய கட்டாயம் திரும்பவும் ஏற்படும். இதனால், மீண்டும் 'கியூ' வரிசையும் பட்டினி யுகமும் ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கின்றார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பந்துல குணவர்த்தன எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர்களான ஜே.ஆர்.ஜயவர்த்தனா, ஆர். பிரேமதாஸ ஆகியோரின் வழியில் இன்றைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டையும் பொருளாதாரத்தையும் ஒரு ஸ்திரநிலையில் வைத்திருந்தார்.

இதனை ஜனாதிபதி சந்திரிகாவும் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுமே வெளிப்படையாக அங்கீகரித்துள்ளனர்.

ஆனால், பிரதமரும் ஜே.வி.பியினரும் திறந்த பொருளாதாரக் கொள்கை கைவிடப்படும் என்று கூறுகின்றனர். இது நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கே சவால் விடுவது போலாகும் - எனவும் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

இவர்களுடைய கூட்டு 1970களின் நிலைக்கு நாட்டை மீண்டும் பின்நோக்கித் தள்ளிவிடும். தனியார்துறை முற்றாக முடக்கப்படும். அனைத்தும் அரச நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும். 'பர்மிட்' முறை அறிமுகப்படுத்தப்படும். வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் புரியமுடியாது. உயர்கல்வியை வெளிநாடுகளில் தொடரமுடியாது. ஒரு குடும்பத்தில் ஒருவரைத் தவிர வேறு ஆள்கள் வெளிநாடு செல்லமுடியாது. அண்டை நாடான இந்தியாவுக்குச் சென்று வரவும் பிணை செலுத்த வேண்டிநேரும்.

திறந்த பொருளாதாரக் கொள்கை கைவிடப்படும்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் இழக்கநேரிடும்.

இங்குள்ள வெளிநாட்டவர்களின் தொழிற்சாலைகள் மூடப்படும். புதிய தொழிற்சாலைகள் எவையும் ஆரம்பிக்கப்படமாட்டா. தொழில் வாய்ப்புகள் இல்லாதொழிக்கப்படும் - என்றார். (க-3)

# வைத்தியரின் போராட்டம் முடிவுக்கு வந்தது

கொழும்பு,செப்.16

பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் ஒருவார காலமாக நடத்திவந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது.

சம்பள முரண்பாடுகளைச் சீர்செய்யக் கோரி பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.

இதனால் நாட்டின் பல பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகள், மத்திய மருந்தகங்கள் என்பவற்றின் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. சுமார் 1,500 மருத்துவர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகளின் கோரிக்கை தொடர்பாக அச் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்குமான பேச்சு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இப்பேச்சுகளின்போதே வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர இணக்கம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (3-9)

# ஜனாதிபதியும் அனுராவும் பிரதமருடன் முரண்பட்டுள்ளனர் என்பது முழுப்பொய்!

## அது அபத்தமான பிரசாரம் என்கிறார் அமைச்சர் மங்கள

கொழும்பு,செப்.16

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவரது சகோதரர் அநுரா பண்டாரநாயக்க போன்றோர் பிரதமருடன் முரண்பட்டுள்ளனர் என்று கூறுவது அபத்தமான பிரசாரமாகும். எதிர்த்தரப்பினரே இப்படிப் புரளியைக் கிளப்புகின்றனர் என்று கூறுகிறார் அமைச்சர் மங்கள சமரவீர.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி தேர்தல் பிரசார குழுவினரின் செய்தியாளர் மாநாடு கொழும்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

அங்கு செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் விளக்கம் கேட்டு ஜனாதிபதி எழுதிய கடிதம் பற்றி பேசப்படுகிறது. அது தொடர்பாகப் பிரதமர் நேரடியாக ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கமளித்துவிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா தாம் அமெரிக்காவுக்குப் பயணமாவதற்கு முன்னரே பிரத மர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைய வைப்பதற்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவார் என உறுதியளித்துவிட்டார். நாட்டுமக்களுக்கும் அதனைத் ·தெளிவுபடுத்திவிட்டார்.

அதேவேளை, அமைச்சர் அநுராபண்டாரநாயக்க கூறியவை எனக் கூறப்படும் விடயங்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. பிரதமர் மஹிந்த ஜனாதிபதியானவுடன் பிரதமர் பதவியை அநுரா பண்டாரநாயக்க பொறுப்பேற்கவுள்ளார்.

எமக்கு எதிரான சக்திகள் எமக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்த முற்படுகின்றன. அது ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை.

ஐ.தே.கவின் திறந்த பொருளாதாரக் கொள்கையினால் அக்கட்சி சார்பாகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாகத் தோல்வியுறுவது முடிவாகிவிட்டது.

நடக்கவிருக்கும் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகளில் உண்மையான செய்திகளை வெளியிடுமாறு ஊடகங்களை வலியுறுத்தக் கோரி தேர்தல் ஆணையாளருக்குக் கடிதமொன்றை எழுதியிருக்கின்றோம். உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடக்கூடாது என்றும், 17ஆவது அரசமைப்பில் உள்ள ஊடக சட்ட விதிகளை ஊடகங்கள் மீறக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளோம். தேவையேற்படின் இதுபற்றி உயர் நீதிமன்றிலும் முறையிடுவோம்.

இன்று அரச ஊடகங்களைத் தவிர ஏனைய ஊடகங்கள் செய்திகளை உண்மைக்குப் புறம்பாகப் பிரசுரிக்கின்றன. அல்லது எமது செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எங்கேயோ ஒரு மூலையில் பிரசுரிக்கின்றன. இந்தப் போக்கில் மாற்றம் வேண்டும் - என்றார் அவர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர்களான சுசில்பிரேமஜயந்த, ரோகித அபேகுணவர்த்தன, ஸ்ரீபதி சூரியாராச்சி, மஹிந்த அபேகுணவர்த்தன யாப்பா போன்றோரும் கலந்துகொண்டனர். (க-3)

# ஐ.நா.நடைமுறைகள் தெரிந்தவரே புதிய செயலாளராக வரவேண்டும்

## வாஷிங்டனில் ஜயந்த தனபால கருத்து

புதிதாகப் பதவியேற்கவிருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம், உள்ளக சீரமைப்புக்களைக் கையாளக்கூடிய நிர்வாகியாகவும் அமெரிக்காவுடனான உறவுகளை மேம்படுத்திக்கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும் என்று ஜயந்த தனபால கூறியிருக்கிறார்.

ஐ.நா. உச்சிமாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் வாஷிங்டனுக்கு விஜயஞ்செய்துள்ள ஜயந்த தனபால ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவராவார். ஜனாதிபதி குமாரதுங்காவுக்கு சர்வதேச விவகாரங்கள் தொடர்பான ஆலோசகராகவிருக்கும் அவர், அரச சமாதான செயலகப் பணிப்பாளராகவும் இருந்துவருகின்றார்.

ஐ.நா. செயலாளர்நாயகம் கொபி அனான் 2006ஆம் ஆண்டு இறுதியில் ஓய்வுபெற்றதும் காலியாகும் அப்பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் இலங்கையின் சார்பில் போட்டியிடவிருக்கின்றார் இவர்.

வாஷிங்ரனில் ஊடக செவ்வியொன்றில் கருத்துவெளியிட்ட தனபால, இந்தப் பதவியை வகிப்பதற்கு உயர்தகுதிகள் மட்டும் இருந்தால் போதாது. அடுத்தவாரம் ஐ.நா. அமைப்புப் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன்பின் அவைகளை செயற்படுத்தும் பொறுப்பு அடுத்துவரும் செயலாளர் நாயகத்தைச் சார்ந்ததாகவே இருக்கும். அவர் எதையும் கையாளும் முகாமைத்துவமுள்ளவராகவும் ஐ.நா. நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறதென்ற தொழில்நுட்பம் அறிந்தவராகவுமிருக்க வேண்டும் என்று கூறினார். ஐ.நா. சீர்திருத்தங்களை எவ்வாறு மேற்கொண்டு சாதிக்கவேண்டும் என்பதை அறிந்தவராகவும் இருக்கவேண்டும் என்றார்.

தனபால ஐ.நாவில் பலவருடங்கள் பணியாற்றிய அனுபவமுள்ளவர். ஆயுதக் குறைப்பு குழுவின் உபசெயலாளராக 5 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பதவிக்குத் தாய்லாந்தின் பிரதிப் பிரதமர் சுராக்கி யார்ட் சதிரத்தாயும் போட்டியிடுகின்றார் - இவர் ஏற்கனவே தென்னாசிய நாடுகள் அமைப்பின் ஆதரவைப்பெற்றிருக்கின்றார். (ப)

# செய்த ஒப்பந்தங்களைத் தேர்தலில் வென்றபின்னர் நிறைவேற்றக் கோரினால் நிலைமை என்னவாகும்?

## ஹெல உறுமயவினரிடம் மல்வத்த பீடாதிபதி நேரில் கேள்வி

கண்டி, செப்.16

''இந்நாட்டில் சகல இன மக்களும் அமைதியாக வாழவேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். அவ்வாறான ஒரு நிலையில் தேர்தலுக்காக முன்வைத்துள்ள ஒப்பந்தங்களையும் நிபந்தனைகளையும் தேர்தலில் வென்ற பின்னர் நிறைவேற்றுமாறு கட்டாயப்படுத்தப்பட்டால் நிலைமை என்னவாகும் என்பதையும் நீங்கள் உணரவேண்டும்.''

- இப்படிக் கூறினார் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல சித்தார்த்த தேரர்.

நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களை விழித்தே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த அமைப்பின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் வண.எல்லாவல மேதானந்த தேரர் தலைமையில் ஏனைய ஹெல உறுமய எம்.பிக்கள் மகாநாயக்கரைச் சந்தித்து உரையாடியபோதே மகாநாயக்கர் மேற்கண்டவாறு அவர்களிடம் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்த நாடு எல்லோருக்கும் பொதுவானதாகும். எவர் எவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்துகொண்டாலும் பரவாயில்லை. அவை நிறைவேற்றப்படவேண்டியவையாயின் அவ்வாறே இடம்பெறட்டும். ஆனால், ஒப்பந்தங்களுக்கு அடி பணிந்து எவருக்கும் செயலாற்ற முடியாத நிலை ஏற்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். நாட்டுக்கு ஏற்றதான ஒப்பந்தங்கள், அனுகூலமானவையாயின் அவற்றை நிறைவேற்றலாம். தப்பில்லை.

எது, எப்படியென்றாலும் உருப்படியான வேலைத்திட்டமே தேவை.

அடிப்படைவாதத்தை விட்டு அடுத்தவரையும் கலந்து பேசுவதற்கான திட்டங்களையும் வகுத்து அனைவரையும் இணைத்துச் செல்வதே பலனைத் தரும். தேர்தல் வெற்றியின் பின்பு முன்னைய நிபந்தனைகளைச் செயற்படுத்தவும் கட்டாயப்படுத்தவும் நினைத்தால் அனைத்துமே பலனற்றுப் போகும் - என அவர் மேலும் தெரிவித்தார். (க-3)

# கொள்கை விளக்க உரை தமிழில் இல்லை; தென் மாகாண சபையில் பெரும் சர்ச்சை

## எதிர்க்கட்சியின் எதிர்ப்பால் அமர்வு ஒத்திவைப்பு

காலி, செப்.16

தென்மாகாண சபையின் கூட்டத் தொடரில் ஆளுநரின் கொள்கை விளக்கம் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படாததற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரிப்பதாக அறிவித்தது. இதனால், ஏற்பட்ட கூச்சல், குழப்பங்கள் காரணமாகக் கூட்டத் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

தென்மாகாண சபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை காலை சபைத் தலைவர் ஐ. விஜேவர்த்தன தலைமையில் கூடியது. தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் கொள்கை விளக்கம் வெளியிடப்படாததற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஐ.தே.க. உறுப்பினர் ஐஸ்டின் கலப்பத்து இங்கு உரையாற்றும்போதே ''இதற்கு முன்னர் தென் மாகாணசபைக் கொள்கை விளக்கங்களைத் தமிழ்மொழியிலும் ஆங்கில மொழியிலும் பிரசுரிக்க முடியுமானால் இம்முறை ஏன் அதைச் செய்யவில்லை? இது சிறுபான்மை மக்களை அவமதிக்கும் செயல்.'' என்று காட்டமாகத் தெரிவித்தார். அவருக்கு ஆதரவாக ஐ.தே.கவின் ஏனைய உறுப்பினர்களும் கூச்சலிட்டனர். சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கின்றனர் என அறிவித்தனர். சபைத் தலைவர் விஜேவர்த்தன இதற்குப் பதிலளிக்கையில்,

சர்ச்சைகளுக்கு மத்தியில் கூட்டத்தை நடத்த முடியாததால், இம்மாதம் 26ஆம் திகதி வரை கூட்டத்தை ஒத்திவைக்கிறார் என அறிவித்தார். அடுத்த கூட்டத்தில் கொள்கை விளக்கம் தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரித்து வழங்கப்படும் எனவும் கூறினார். (க-3)


# குருதிக்கொடையாளர்களுக்கு!

- நோயாளர்களுக்குப் பயன்படுத்துவதற்காக இரத்தம் வழங்குபவர்கள் குருதிக் கொடையாளர்கள் எனப்படுவர்.
- இவர்கள்,
  - ஆரோக்கியமானவர்களாகவும்
  - உடல் நிறை 50 கி.கி. மேற்பட்டவராகவும்
  - வயது 18 தொடக்கம் 60 வரையிலும்
  - இரத்ததானம் வழங்கும் நாளன்று உணவு உட்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஆண், பெண் இருபாலாரும் எவ்வித பாதிப்பும் இல்லாது நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம்.

*- இரத்த வங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்கு கிளிநொச்சி உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் எஞ்சியோரின் பெயர்களும் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களும் மன்னார் மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப் படையில் தெரிவானோரின் பெயர்களும் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் ஒரு பகுதியினரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

கி/ 1745 திரு. வயித்திலிங்கம் கதிரவேலு
கி/ 1749 திரு. கிருஷ்ணசாமி பொன்னம்பலம்.
கி/ 1797 திரு. சின்னப்பு பொன்னம்பலம்
கி/ 1806 திருமதி. நாகரத்தினம் பஞ்சரத்தினவடிவேலாயுதம்
கி/ 1808 திருமதி. இராசேஸ்வரி வேலுப்பிள்ளை
கி/ 1812 திரு. வேலுப்பிள்ளை மகேசன்
கி/ 1843 திரு. வேதவனம் வேலுப்பிள்ளை
கி/ 1893 திரு. மெக்கேல் அருளானந்தம்
கி/ 1897 திரு. வல்லிபுரம் குமாரசாமி
கி/ 1917 திரு. நாகன் இராமச்சந்திரன்
கி/ 1919 திரு. மகாதேவா சுந்தர்ராசா
கி/ 1941 திரு. சின்னையா வீரசிங்கம்
கி/ 1963 திரு. கந்தையா சுந்தரலிங்கம்
கி/ 1973 திரு. நாகமணி சித்திரவடிவேல்
கி/ 2004 திரு. கனகரத்தினம் கனகசிங்கம்
கி/ 2012 திரு. இராமநாதர் தியாகராசா
கி/ 2064 திரு. நாகமணி நடராசா
கி/ 2100 திரு. ஐயாத்துரை ஆனந்தமூர்த்தி
கி/ 2102 திரு. பாலர் குலசிங்கம்
கி/ 2113 திரு. சின்னத்தம்பி பரமானந்தம்
கி/ 2188 திருமதி. அருந்ததி இரத்தினம்
கி/ 2190 திரு. இராயர் தனப்பிரகாசம்
கி/ 2198 திரு. ஐயம்பிள்ளை அருணாசலம்
கி/ 2217 திரு. சிற்றம்பலம் மகாலிங்கம்
கி/ 2218 திரு. சரவணமுத்து சின்னராசா
கி/ 2221 திரு. நாகலிங்கம் சபாரத்தினம்
கி/ 2271 திருமதி. வள்ளியம்மை பசுபதி
கி/ 2302 திருமதி. இராஜேஸ்வரி ஜெயதேவன்
கி/ 2310 திருமதி. அன்னப்பிள்ளை கார்த்திகேசு
கி/ 2312 திரு. அம்பலவாணர் தனிநாயகம்
கி/ 2331 திரு. கணபதி கந்தையா
கி/ 2334 திரு. சின்னன் முத்துக்குமாரு
கி/ 2347 திருமதி. பரஞ்சோதி சண்முகம்
கி/ 2359 திரு. நாகநாதர் பொன்னுத்துரை
கி/ 2366 திரு. அருணாசலம் ஆறுமுகம்
கி/ 2401 திரு. முருகேசு சுப்பிரமணியம்
கி/ 2410 திரு. முத்துக்குமாரு சச்சிதானந்தசிவம்
கி/ 2441 திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு
கி/ 2445 திரு. ஐயாத்துரை தில்லையம்பலம்
கி/ 2498 திரு. இராமையா பேரம்பலம்
கி/ 2508 திரு. முத்தர் இராசையா
கி/ 2513 திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பி
கி/ 2550 திரு. முத்துலிங்கம் இராமலிங்கம்
கி/ 2575 திருமதி. பரிமளம் சிவலிங்கம்
கி/ 2623 திரு. சின்னத்துரை பெரியதுரை
கி/ 2635 திரு. சரவணமுத்து சபாரட்ணம்
கி/ 2694 திருமதி. இரத்தினாம்பிகை செல்வநாயகம்
கி/ 2701 திரு. இராமநாதர் கந்தையா
கி/ 2710 திரு. செபஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம்
கி/ 2711 திரு. ஆழ்வாப்பிள்ளை செல்லையா
கி/ 2714 திருமதி. அமராவதி வினாசி
கி/ 2715 திருமதி. லீலாவதி ஜெகநாதன்
கி/ 2744 திரு. கனகசபை கோபாலபிள்ளை
கி/ 2759 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
கி/ 2763 திரு. சின்னையா நடராசா
கி/ 2782 திரு. செபஸ்தியாம்பிள்ளை மனோகரசீலன்
கி/ 2815 திரு. கந்தையா முருகேசு
கி/ 2831 திருமதி. சிவநாயகி முருகையா
கி/ 2888 திரு. பொன்னுச்சாமி பெருமாள்
கி/ 2954 திரு. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்
கி/ 2964 திரு. கதிர்காமு குணசேகரன்
கி/ 2973 திரு. நவரத்தினம் நல்லதம்பி
கி/ 2982 திரு. இளையதம்பி நடராசா
கி/ 2999 திரு. கந்தையா நடராசா
கி/ 3000 திரு. தம்பையா மகேஸ்வரன்
கி/ 3032 திரு. செல்லத்துரை துரைராசா
கி/ 3055 திரு. பேதுறு அந்தோனிப்பிள்ளை
கி/ 3089 திரு. செல்லையா சச்சிதானந்தசிவம்
கி/ 3111 திரு. கந்தையா நவரத்தினம்
கி/ 3125 திருமதி. மேரிலிப்ரின் மகேஸ்வரராஸ்
கி/ 3144 திரு. கந்தையா கிருஷ்ணபிள்ளை
கி/ 3184 திரு. தாமோதிரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்
கி/ 3185 திரு. சீனுக்குட்டி சபாநாயகம்
கி/ 3209 திரு. கந்தையா நல்லதம்பி
கி/ 3214 திரு. தம்பையா நடராசா
கி/ 3216 திரு. வேலுப்பிள்ளை நமசிவாயம்
கி/ 3223 திரு. பொன்னையா சின்னத்தம்பி
கி/ 3273 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
கி/ 3310 திரு. அப்பாத்துரை சுந்தரலிங்கம்
கி/ 3311 திருமதி. சற்குணம் பாலசுந்தரம்
கி/ 3323 திரு. கனகசேகரம் சுப்பிரமணியம்
கி/ 3326 திருமதி. சிவபாக்கியம் சண்முகம்
கி/ 3342 திரு. சின்னத்தம்பி நாகரத்தினம்
கி/ 3371 திரு. இளையகுட்டி பரராசசிங்கம்
கி/ 3374 திருமதி. நடேஸ்வரி யோசேப்
கி/ 3389 திரு. சுந்தரம் பாலையா
கி/ 3408 திரு. இராசையா வேலுப்பிள்ளை
கி/ 3433 திருமதி. சின்னத்தங்கம் இராமநாதபிள்ளை
கி/ 3464 திரு. சின்னத்துரை மருதப்பு
கி/ 3535 திரு. நடேசபெருமாள் கணேசரத்தினம்
கி/ 3540 திரு. காசிப்பிள்ளை சிவப்பிரகாசம்
கி/ 3582 திரு. வல்லிபுரம் இரத்தினம்

### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

கி/ 19 திரு. காசிப்பிள்ளை வன்னியசிங்கம்
கி/ 83 திரு. கனகசபை பரராஜசிங்கம்
கி/ 95 திரு. சோமசுந்தரம் மயில்வாகனம்
கி/ 104 திரு. சின்னத்தம்பி வைத்திலிங்கம்
கி/ 145 திரு. சுப்பையா கிருஷ்ணபிள்ளை
கி/ 151 திரு. தில்லைக்கண்ணு குணராசா
கி/ 157 திரு. இராஜரெட்ணம் சிறிபாஸ்கரன்
கி/ 163 திரு. வேலுப்பிள்ளை இராமநாதன்
கி/ 170 திரு. சுப்பிரமணியம் விசுவலிங்கம்
கி/ 191 திருமதி. ஜெயந்தாபத்மினி பரமேஸ்வரன்
கி/ 207 திருமதி. மங்கையற்கரசி பரமசாமி
கி/ 256 திரு. கந்தசாமி கனகேந்திரன்
கி/ 300 திரு. கயிலாயபிள்ளை யோகராசா
கி/ 329 திருமதி. மேரியோசேப்பின் பெனடிற்
கி/ 336 திரு. சின்னத்தமபி அரியதம்பி
கி/ 339 திரு. சண்முகம் சிறிஸ்கந்தராஜா
கி/ 407 திருமதி. கனகாம்பிகை விசுவலிங்கம்
கி/ 447 திரு. செல்லையா கேதீஸ்வரன்
கி/ 484 திருமதி. செல்லம்மா சிவஞானம்
கி/ 546 திரு. முத்துக்குமாரு சிவராசா
கி/ 549 திரு. செல்லையா கந்தசாமி
கி/ 566 திரு. தில்லையம்பலம் வினாயகமூர்த்தி
கி/ 575 திரு. விஜயரட்ணம் சூரியகுமாரன்
கி/ 581 திரு. கந்தசாமி கோபாலசிங்கம்
கி/ 583 திரு. செல்லையா ஜெயராசா
கி/ 637 திருமதி. தங்காத்கினம் நடேசு
கி/ 679 திரு. மயிலு தேவராசன்
கி/ 715 திருமதி. ஜெசிந்தாமேரி மோகன்
கி/ 760 திருமதி. சந்திரேஸ்வரி சண்முகராசா
கி/ 812 திரு. நாகலிங்கம் தயாபரராசா
கி/ 820 திரு. தங்கவேலு கிருஷ்ணமூர்த்தி
கி/ 845 திரு. கந்தையா தங்கராசா
கி/ 901 திரு. சண்முகம் அற்புதராஜா
கி/ 930 திருமதி. இராணிமலர் இரத்தினசிங்கம்
கி/ 961 திரு. தம்பையா தருமதுரை
கி/ 964 திரு. கார்த்திகேசு சுப்பிரமணியம்
கி/ 966 திரு. முருகேசு இராசதுரை
கி/ 1001 திரு. தியாகராசா சுதர்சன்
கி/ 1031 திரு. இராஜா ராஜசேகர்
கி/ 1081 திரு. வேலுப்பிள்ளை கனகசபை
கி/ 1093 திருமதி. பிரேமாவதி கிருஸ்ணநவரட்ணராஜா
கி/ 1094 திரு. கந்தையா மார்க்கண்டு
கி/ 1119 திரு. கந்தையா நடராசா
கி/ 1141 திரு. வீரகத்தி வல்லிபுரம்
கி/ 1173 திரு. கந்தையா பஞ்சாட்சரம்
கி/ 1175 திரு. சின்னையா சிவநேசன்
கி/ 1181 திருமதி. மகேஸ்வரி செல்வரத்தினம்
கி/ 1200 திரு. இராசையா ஸ்ரீசண்முகவரதன்
கி/ 1212 திரு. முருகர் செல்வராசா
கி/ 1244 திரு. சின்னக்குட்டி கிருஷ்ணகோபால்
கி/ 1262 திரு. சண்முகம் சின்னத்தம்பி
கி/ 1270 திரு. கணபதி ஆதிமூலம்
கி/ 1277 திரு. தம்பிஐயா சுந்தரலிங்கம்
கி/ 1304 திரு. குணரட்ணம் செல்வரத்தினம்
கி/ 1313 திருமதி. கோமதி விஸ்வலிங்கம்
கி/ 1317 திரு. சிவஞானசுந்தரம் திருக்கேதீஸ்பரன்
கி/ 1335 திரு. சிவகுரு திருநாவுக்கரசு
கி/ 1355 திரு. குமாரசாமி தவராசசிங்கம்
கி/ 1359 திரு. காசிப்பிள்ளை இராமலிங்கம்
கி/ 1374 திரு. ஏரம்பு நடராசா
கி/ 1482 திருமதி. பொன்னம்மா ஆழ்வாப்பிள்ளை
கி/ 1485 திரு. கிருஷ்ணபிள்ளை சிவபாலசுந்தரம்
கி/ 1530 திரு. முருகேசு திருநாவுக்கரசு
கி/ 1550 திரு. இராமையா பழனியாண்டி
கி/ 1571 திரு. கந்தர் ஞானசேகரம்
கி/ 1575 திரு. முருகேசு கனகலிங்கம்
கி/ 1587 திரு. கந்தையா முருகேசு
கி/ 1614 திருமதி. லலிதாதேவி செல்லத்துரை
கி/ 1668 திரு. ஐயம்பிள்ளை சண்முகரத்தினம்
கி/ 1672 திரு. கணபதிப்பிள்ளை நாகேந்திரம்
கி/ 1707 திரு. கந்தையா செல்வரத்தினம்
கி/ 1721 திரு. கபிலாசா கனகசபாரத்தினம்
கி/ 1740 திரு. கதிரன் தங்கராசா
கி/ 1755 திருமதி. ஞானலோஜினி திருஞானசம்பந்தர்
கி/ 1759 திரு. வேலுப்பிள்ளை சற்குணநாதன்
கி/ 1799 திருமதி. பராசக்தி சுப்பிரமணியம்
கி/ 1811 திருமதி. தங்கம்மா கனகசபை
கி/ 1846 திரு. வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தி
கி/ 1869 திருமதி. தங்கமணி வரதராசன்
கி/ 1898 திருமதி. தனபாக்கியம் முத்துக்குமார்
கி/ 1912 திரு. சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்
கி/ 1935 திரு. குழந்தைவேல் நடராசா
கி/ 1939 திருமதி. இராசம்மா மார்க்கண்டு
கி/ 1951 திருமதி. லூர்தம்மா பிரசாத்நாயகம்
கி/ 1966 திரு. அருணாசலம் சுப்பிரமணியம்
கி/ 1969 திருமதி. இராசமணி மயில்வாகனம்
கி/ 1984 திரு. சிதம்பரநாதன் தெய்வேந்திரன்
கி/ 2017 திருமதி. சாந்தநாயகி குலசேகரம்
கி/ 2023 திரு. சுப்பையா பரம்சோதி
கி/ 2024 திரு. பொன்னையா நாகரத்தினம்
கி/ 2061 திரு. வேலுப்பிள்ளை நாகரத்தினம்
கி/ 2073 திரு. ஆறுமுகம் நாகப்பன்(ஜோன்)
கி/ 2144 திருமதி. சசிகலா சத்தியமூர்த்தி
கி/ 2145 திரு. இராசையா ஞானசிங்கம்
கி/ 2165 திருமதி. நேசமணி பாலச்சந்திரன்
கி/ 2215 திரு. வேலாயுதம் வரதராஜன்
கி/ 2228 திரு. கணபதிப்பிள்ளை சிவகுமார்
கி/ 2280 திருமதி. அன்னலட்சுமி தியாகலிங்கம்
கி/ 2281 திரு. முருகேசு சண்முகம்
கி/ 2307 திரு. நாகரட்ணம் பாக்கியநாதன்
கி/ 2319 திருமதி. யோகேஸ்வரி கனகராசா
கி/ 2324 திரு. ஐயாத்துரை நாகேந்திரம்
கி/ 2358 திரு. பொன்னம்பலம் பொன்னுத்துரை
கி/ 2380 திரு. செல்லத்துரை விமலநாதன்
கி/ 2415 திருமதி. இலட்சுமி யோகராசா
கி/ 2423 திருமதி. மங்களாதேவி சிவசந்திரபாரதி
கி/ 2431 திரு. வயிரமுத்து மாணிக்கம்பிள்ளை
கி/ 2449 திருமதி. கிருஸ்ணகுமாரி சுப்பிரமணியம்
கி/ 2462 திரு. மரியநாயகம் மகேந்திரன்
கி/ 2518 திரு. முருகேசு விமலநாதன்
கி/ 2527 திருமதி. நவமணி குழந்தைவேல்
கி/ 2539 திருமதி. நவநீதம் கந்தையா
கி/2596 திரு. சிற்றம்பலம் லோகநாதன்
கி/ 2599 திரு. ஆறுமுகம் விக்கினேஸ்வரன்
கி/ 2631 திரு. முருகேசு நாகராசா
கி/ 2636 திரு. வெள்ளைச்சாமி வேலாயுதம்
கி/ 2661 திரு. பாலசுந்தரம் விக்னேஸ்வரன்
கி/ 2664 திரு. பொன்னையா செல்வராசா
கி/ 2669 திரு. சிவலிங்கம் நாகலிங்கம்
கி/ 2676 திரு. அம்பலவாணர் ஈஸ்வரபாலன்
கி/ 2693 திரு. பசுபதி ஐயாத்துரை
கி/ 2717 திரு. நாகலிங்கம் சுந்தரானந்தன்
கி/ 2777 திரு. பொன்னையா சச்சிதானந்தம்
கி/ 2800 திரு. முருகேசு சிவானந்தன்
கி/ 2806 திரு. கட்டையர் மனோகரலிங்கம்
கி/ 2825 திருமதி. இராசலெட்சுமி வரதராஜா
கி/ 2857 திரு. வயித்தலிங்கம் கந்தசாமி
கி/ 2893 திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்
கி/ 2894 திருமதி. மனோன்மணி நாகரெத்தினம்
கி/ 2902 திரு. வாரித்தம்பி தவேந்திரன்
கி/ 2903 திரு. அருணாசலம் இந்திரதாசன்
கி/ 2928 திரு. நடராஜா கந்தசாமி
கி/ 2939 திருமதி. தேவநாயகி யேசுரத்தினம்
கி/ 3001 திரு. கந்தையா சோமசுந்தரம்
கி/ 3029 திரு. தம்பியையா யோகராசா
கி/ 3035 திரு. செல்லச்சாமி புவனேஸ்வரன்
கி/ 3051 திருமதி. திருப்பதி பேரம்பலம்
கி/ 3063 திருமதி. விஜயலட்சுமி மார்க்கண்டேயதாஸ்
கி/ 3094 திருமதி. சுலோச்சனா புண்ணியமூர்த்தி
கி/ 3099 திரு. இராசா இராஜலிங்கம்
கி/ 3109 திரு. சிவசுப்பிரமணியம் நகுலேஸ்வரன்
கி/ 3119 திரு. சின்னர் சண்முகம்
கி/ 3124 திருமதி. கிருஷ்ணவேணி சூசைதாசன்
கி/ 3203 திரு. தெட்சணாமூர்த்தி இராசதுரை
கி/ 3204 திரு. குமாரசாமி விஜயபாலா
கி/ 3254 திரு. கதிர்காமு தம்பிராசா
கி/ 3296 திரு. அப்புத்துரை ஸ்ரீரங்கநாதன்
கி/ 3318 திரு. செல்லையா நாகேஸ்வரராவ்
கி/ 3337 திருமதி. மீனலோகினி கருணாமூர்த்தி
கி/ 3347 திரு. தம்பியையா கயிலையங்கிரிநாதன்
கி/ 3367 திரு. நவரத்தினம் குணகுலசிங்கம்
கி/ 3385 திரு. குருசாமி வேலப்பன்செட்டியார்
கி/ 3398 திரு. இளையதம்பி கந்தசாமி
கி/ 3407 திரு. சின்னப்பு கென்றி
கி/ 3438 திரு. கந்தையா சிவலிங்கம்
கி/ 3487 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
கி/ 3488 திருமதி. தமிழ்ச்செல்வி தருமகுலசிங்கம்
கி/ 3499 திருமதி. தவமணி பாலசுப்பிரமணியம்
கி/ 3555 திருமதி. வதனமலர் துரைராசா
கி/ 3568 திருமதி. யோகேஸ்வரி அன்னராசா
கி/ 3585 திரு. சின்னத்துரை யோகராசா

### மன்னார் மாவட்டம்

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

ம/ 20 திரு. இராமலிங்கம் ஆறுமுகம்
ம/ 39 திரு. மூத்ததம்பி நவரட்ணம்
ம/ 53 திரு. மூத்ததம்பி பொன்னம்பலம்
ம/ 56 திரு. அழகன் அழகர்
ம/ 71 திரு. சதாசிவம் விஜயரத்தினம்
ம/ 97 திரு. சண்முகம் பாலசிங்கம்
ம/ 99 திரு. வைரவநாதன் நவரத்தினம்
ம/ 127 திரு. வயிரமுத்து ஆறுமுகம்
ம/ 152 திரு. கணபதிப்பிள்ளை கதிர்காமு
ம/ 162 திரு. இராமலிங்கம் திருவம்பலம்
ம/ 172 திரு. அந்தோனிப்பிள்ளை மரியநாயகம்சிறில்
ம/ 263 திரு. ஞானப்பிரகாசம் ஜெயலிங்கம்
ம/ 275 திரு. மத்தேசுப்பிள்ளை செபமாலை
ம/ 276 திரு. மயில்வாகனம் ஆறுமுகம்
ம/ 283 திரு. அருணாசலம் இராமசேது
ம/ 324 திரு. சுவக்கீன் சூசைப்பிள்ளை
ம/ 329 திரு. ஜெறுமையா அந்தோனிமுத்து
ம/ 337 திரு. அந்தோனி மத்தேஸ்
ம/ 363 திரு. சின்னவர் நாகலிங்கம்
ம/ 385 திருமதி. வள்ளிப்பிள்ளை கந்தப்பு
ம/ 396 திரு. தம்பிப்பிள்ளை வினாயகமூர்த்தி
ம/ 416 திரு. பேதுறுப்பிள்ளை ஞானமணி
ம/ 417 திரு. ஐயாத்துரை வெற்றிவேல்
ம/ 418 திருமதி. மனோன்மணி கந்தையா
ம/ 433 திரு. நாகலிங்கம் கனகரத்தினம்
ம/ 439 திரு. கிட்ணபிள்ளை குணசேகரம்பிள்ளை
ம/ 445 திரு. தொம்மை சந்தான் ஜேம்ஸ்
ம/ 453 திரு. பொன்னையா ஞானப்பிரகாசம் பொன்ராஜா
ம/ 497 திரு. சந்தான் செபமாலை
ம/ 511 திரு. பெருமாள் யோசப்
ம/ 519 திரு. மரிசால்பிலிப்பு அந்தோனிப்பிள்ளை
ம/ 547 திரு. சின்னத்தம்பி பொன்னையா
ம/ 554 திரு. சீமான் தேவசகாயம்
ம/ 578 திரு. கணபதிப்பிள்ளை சிவபாதசுந்தரம்
ம/ 600 திரு. தொம்பை சந்தான்
ம/ 627 திரு. வல்லி கிட்டினன்
ம/ 660 திரு. அந்தோனி இசுதோர்கொடுதோர்
ம/ 684 திருமதி. அன்னம்மா செபஸ்தியாம்பிள்ளை
ம/ 702 திரு. கவிரியேல் குருசுமுத்து
ம/ 711 திரு. சின்னையா மயில்வாகனம்
ம/ 737 திருமதி. புனிதவதி கந்தையா
ம/ 776 திருமதி. பாஞ்சாலி குருநாதன்

### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

ம/ 6 திரு. யோசேப் பெனடிற்
ம/ 8 திரு. கந்தையா சிவபாதசுந்தரம்
ம/ 11 திரு. கார்த்திகேசு கனகரத்தினம்
ம/ 46 திரு. பொன்னு நாகராசா
ம/ 77 திரு. பூபாலசிங்கம் செல்வநாயகம்
ம/ 101 திருமதி. தர்மராணி துளசிதாஸ்
ம/ 112 திரு. செல்வநாயகம் செல்வராசா
ம/ 121 திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
ம/ 123 திரு. மயில்வாகனம் நவரெத்தினம்
ம/ 153 திருமதி. சரோஜினிதேவி பற்குணராசா
ம/ 178 திரு. அகஸ்ரின் லூயிஸ்
ம/ 191 திரு. மார்க்கண்டு சிவலிங்கம்
ம/ 235 திரு. சுவாந்தகுருஸ் அந்தோனி

(வளரும்)

# ஆரம்பக் கல்விதான் அத்திபாரம் அதனைச் சிறந்த முறையில் இடவேண்டும்

***தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்அறிவுறுத்து***

தென்மராட்சி,செப்.16

மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கும் பணியில் பெற்றோர், ஆசிரியர், சமூகத்தினர் ஆகிய அனைவரும் அளப்பரிய பங்காற்றுகின்றனர். ஆரம்பக் கல்வியில் இடப்படும் நல்ல கற்றலுக்கான அத்திபாரம் சமூகக் கட்டுமாணத்துக்கான தூண்களாக மிளிரப் போகின்றன.

இவ்வாறு சாவகச்சேரி ரைனி டொட்ஸ் கோனர் முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா தெரிவித்தார்.

முன்பள்ளி இயக்குநர் போதகர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளின் நிறைவில் முதன்மை விருந்தினர் மேலும் உரையாற்றுகையில்:

ஐந்து வயதுக்குட்பட்ட காலத்திலேயே பிள்ளைகளுக்கு மூளைவளர்ச்சி 90 வீதம் ஏற்படுகிறது. இக்காலப் பகுதியில் கிடைக்கும் கல்வி அறிவு அதன் எதிர்கால வளர்ச்சிக்கு வித்திடுகிறது. இதனைக் கருத்திற்கொண்டே கல்வி அமைச்சு முன்பள்ளிக் கல்விக்குப் புதிய கல்வித் திட்டத் தில் முக்கியத்துவம் வழங்கி, விளையாட்டுக்கள் மூலம் கல்வியினை வழங்கவேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது. மாணவர்கள் மகிழ்ச்சியாக உள்ளவேளையில் கல்வியும் அவர்களைச் சென்றடைகிறது.

இதனாலலேயே, சிறார்கள் அனைவரையும் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பரிசில்களையும் வழங்கி கல்வித் தரத்தையும் விளையாட்டுத் தரத்தினையும் ஊக்குவிக்கின்றது. (ப-117)

# ஆங்கில மொழி மூலம் உயர் கல்வியைப் பெற்றால் சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறமுடியும்

**யாழ்.ஆயர் மேதகு சவுந்தரநாயகம் ஆண்டகை**

கொழும்புத்துறை, செப்.16

மாணவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சியடைய வேண்டியது காலத்தின் தேவையாகிவிட்டது. இதனைக் கற்பதன் மூலம்தான் சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறமுடியும். ஆங்கில மொழிக்கற்கை இன்று பரவலாகப் பல இடங்களிலும் நடத்தப்படுகிறது. போர்ச் சூழலினால் ஏற்பட்ட அமைதியின்மை பல்வேறு தடங்கல்களைத் தந்தபோதும், உயர் கல்வி கத்தோலிக்கக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

யாழ். அகவொளி நிலையத்தில் உயர் கல்விக் கத்தோலிக்க கல்லூரியை (CCHS) அண்மையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

உயர் கல்விக் கத்தோலிக்கக் கல்லூரியின் பதிலாளர் ஏ.எஸ். அகஸ்ரினின் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ். ஆயர் தொடந்து உரையாற் றும் போது தெரிவித்ததாவது-



இளைஞர் யுவதிகள் ஆங்கில மொழியில் போதிய பரிச்சயம் இல்லாததால் உயர்வேலைவாய்ப்பினைப் பெறமுடியாமல் உள்ளது. மட்டுமன்றி உயர் கல்வியை மேற்கொள்ள முடியாது தவிர்க்கின்றனர். இவ்வாறான கல்லூரிகள் மூலம் இந்த நிலை மாற்றப்படவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் தெரிவித்ததாவது-

யாழ்.திருச்சபை பல்வேறு கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. பாடசாலைக் கல்வி, மறைக் கல்வி, குடும்பக் கல்வி, உளவளக் கல்வி, குருத்துவக் கல்வி எனப் பல வழிகளில் பணியாற்றி வருகிறது.

முன்னாள், பிறநாட்டு ஆயர்கள் குருக்களின் அயராத உழைப்பும் ஆர்வமுமே நம் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உறுதியளித்தது.

அதேபோன்று நாமும் சவால்களை எதிர்கொண்டு முன்னேற்றம் காணவேண்டும். இதற்கு மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அதிகரிக்கப்பட வேண்டும் - என்றார்.

இந்த நிறுவனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் தமது உரையில் - எமது இளைஞரின் உருவாக்கத்திற்கு ஆங்கில அறிவு இன்றியமையாதது. இக்குறையை நீக்கும் ஆரம்ப முயற்சியாக இங்கு ஆங்கில டிப்ளோமாக் கற்கைநெறி போதிக்கப்படவுள்ளது. இதன் மூலம் நல்ல பயிற்சிகளையும் சந்தர்ப்பங்களையும் இந்நிறுவனம் வழங்கும் என்று தெரிவித்தார். (ப-30-204)

# அடக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பது இறையியலாளர் கடமை

**தமக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் தெரிவிக்கிறார் பேராயர் ஜெபநேசன்**

சங்கானை,செப்.16

துணிவு என்பது இறைபணியாளனுக்கு மிகவும் அவசியமானதொன்றாகும். "அடிமைப்படுத்தப்பட்டு அடக்கப்பட்ட எம் தமிழ் இனத்திற்காக நான் போராடி வருகிறேன். எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிவிட்டேன். இலங்கை அரசு என்மீது சீறி விழுந்தது. எனது கார் அடித்து நொருக்கப்பட்டது. வீடு சூறையாடப்பட்டது. இவையெல்லாம் தமிழ் மக்களின் அவலத்தை உலகிற்கு நான் எடுத்துக்கூறியதால் ஏற்பட்டவையாகும். ஆனால், நான் பனங்காட்டு நரியல்ல. எந்தச் சலசலப்புக்கும் அஞ்சமாட்டேன். அடக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியது இறையியலாளர்களின் முக்கிய கடமையாகும்.

இவ்வாறு கூறினார் தென்னியந்தியத் திருச்சபையின் ஓய்வுபெற்ற பேராயர் வண.ஜெபநேசன் அடிகளார்.

ஓய்வுபெற்ற அடிகளார் எஸ்.ஜெபநேசனின் சேவையைப் பாராட்டி சங்கானை தென்னிந்திய திருச்சபையினரால் நடத்தப்பட்ட விழாவில் பங்குபற்றி உரையாற்றும் போதே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விழா பெஞ்சமின் ஜெயராசா தலைமையில் இடம்பெற்றது. விழாக் குழுத் தலைவர் இராஜ்குமார், சங்கானை தென்னிந்தியத் திருச்சபைக் குருவானவர் கே.எஸ்.ஜோசப், வண.எஸ்.சீ.ஆர்னோல்ட், வண. ஜே.தேவஅருட்செல்வம், வண. செபஸ்தியான் அன்ரனி உட்பட திருச்சபைப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

பேராயர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எனது இனத்திற்காக நான் எதைச் செய்ய வேண்டும் என்று இறைவன் என்னை அனுப்பினாரோ அப்பணியை நான் திருப்தியுடன் செய்யவேண்டும். எனது உறவினர்கள் எல்லோரும் வெளிநாட்டில் சுகபோக வாழ்க்கை வாழ்கிறார்கள். என்னையும் அழைத்தார்கள். நான் மறுத்துவிட்டேன். ஏன் எனது தந்தையார்கூட வெளிநாடு சென்றார். என்னையும் அழைத்தார். நான் செல்லவில்லை. அடக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டும். இதுவே திருச்சபையின் முக்கிய கடமை என்று இறையியலாளர்கள் கூறுகிறனர்.

எதற்கும் வைரநெஞ்சம் வேண்டும். உள்ளத்திலே உறுதி வேண்டும். மனிதனின் தீர்ப்பைவிட இறைவனின் தீர்ப்பே இறுதியானது. எனக்கு முன் உரையாற்றியோர் இனிப் பேராயர் யார் என்று அங்கலாய்த்தார்கள். இப்படி அங்கலாய்க்கத் தேவையில்லை. இறைவன் முன்குறித்தபடியே எல்லாம் நடக்கும் என்று கூறினார். விழாக் குழுத் தலைவரால் பேராயருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. (ப-29)






# வேற்றுமொழி கற்பதன் மூலம் எமது மொழி, கலாசாரத்தை இழக்கலாகாது

**இடித்துரைக்கிறார் முன்னாள் நீதிபதி**

வலி.தென்மேற்கு,செப்.16

''ஆங்கில மொழி அதிகளவில் கலந்த பேச்சுநடை இன்று எமது மக்களிடையே அதிகரித்துக்காணப்படுவது வேதனைக் குரிய விடயமாகும். வேற்றுமொழி கற்று எமது மொழியையும் கலை, கலாசாரத்தையும் இழக்கும் நிலை ஏற்பட இடமளிக்கக் கூடாது. வீடு இடிந்து போனால் மீண்டும் கட்டிக்கொள்ளலாம். கலைகலாசாரத்தை இழந்து விட்டால் அதனை மீண்டும் நாம் பெறமுடியாது''



வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய வருடாந்த கலை, கலாசார விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு இவ்வாறு தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்ற முதல் நாள் விழாவுக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமை வகித்தார்.

முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது: கலை, கலாசாரம் ஒரு நாட்டின் - ஒரு இனத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் அத்திபாரமாக அமைவது. கலை, கலாசாரம் அழிந்துவிட்டால் இனத்தின் தனித்துவமும் அழிந்துவிடும். தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாட்டுக்கள் பல பாடிய பணிகளை மறந்து விடமுடியாது.

'' கந்தபுராணக் கலாசாரம்'' என்று யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் புகழ் பெற்று பெருமதிப்புப் பெற்றிருந்தது. இன்று ஆலயங்களுக்கு எமது கலாசாரத்திற்கு சற்றும் பொருந்தாத ஆடைகளை சிலர் அணிந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மொழியை காணோம். கலாசாரத்தை காணோம் என்று தேடவேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ்மொழி உயர்ந்தது, சிறப்பு வாய்ந்தது என்று பெருமையுடன் கூறிக்கொண்டிருக்கின்றோம். முச்சங்கம் வைத்து செந்தமிழ் வளர்த்த தமிழினம் என்று வரலாற்றுப் பெருமை பேசிக்கொண்டிருப்பதால் மட்டும் பயனில்லை. இது பற்றி சிந்தித்து செயற்பட இதுபோன்ற கலை, கலாசார விழாக்கள் பேருதவி செய்கின்றன என்று கூறினார்.

முன்னாள் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் உரை நிகழ்த்துகையில் -

புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஈழத் தமிழ்மக்களில் பலர் அந்தந்த நாடுகளில் எமது மொழியையும் கலை கலாசாரத்தையும் பின்பற்றிவருவதுடன் அவற்றை வளர்க்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது.

கனடா, பிரிட்டன், சுவிஸ் ஆகிய நாடுகளில் எமது மக்கள் ஆலயங்களை நிறுவியும் கலை, கலாசார அமைப்புகளை உருவாக்கியும் வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. எமக்குத் துன்பங்கள் - கஷ்டங்கள் வரும்போது ஆறுதல் அளிப்பதற்கும் கலைகளும் பயன்படுகின்றன. எத்தனை அனர்த்தங்கள் ஏற்பட்டபோதும் எமது தமிழ்க் கலைகளை அழியவிடாது பேணிப் பாதுகாப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் -என்றார்;

சோமசுந்தரப் புலவர் இந்த மண்ணில் அன்று பாடிய ''ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே'' போன்ற பல பாடல்களை நாம் மறந்து விடமுடியாது - என்றார்.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில்-

எமது பிரதேசத்திலுள்ள இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களை வெளிக்கொண்டுவந்து அவர்களின் ஆற்றல்களை, திறமைகளை ஊக்குவிப்பதற்கு இதுபோன்ற கலை, கலாசார விழாக்கள் பேருதவியாக உள்ளன. யாழ். மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மாகாண தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகள் நிகழ்த்தியதைப்போல கலைப்போட்டிகளிலும் எமது மாவட்டம் சாதனை படைக்க வேண்டும் - என்று கூறினார். (ப-135)

# இணைந்து செயல்பட்டாலே கல்வித் தரத்தை உயர்த்தலாம்

**வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்**

குடத்தனை,செப்.16

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் இணைந்து குடும்பம்போல் செயற்பட்டு பாடசாலையை அபிவிருத்தி செய்வதுடன் மாணவர்களின் கல்வித் தரத்தையும் மேம்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா.



தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் எம். அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மேலும் அவர் அங்கு ரையாற்றுகையில், மாணவர்கள் நவீன விஞ்ஞா தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப தமது அறிவு ஆற்றல்களை மேம்படுத்த வேண்டும் நவீன தொழில்நுட்ப யுகத்திலே சவால்களுக்கு கங்கொடுக்க முடியாதநிலை ஏற்படும். மாணவர்கள் ஆங்கிலம், கணனி அறிவு மேம்பாட்டில் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

பாடசாலைகளுக்குக் கிடைக்கும் வளங்களையும் மாணவர்கள் பயன்படுத்தத் தவறக் கூடாது. கிடைக்கும் வளங்களை தேவைக் கேற்ப கல்வித் திணைக்களம் வழங்கும். இதில் எந்தவிதமான வேறுபாடுகளும் காட்டப்பட மாட்டாது என்று கூறினார்.

விழாவிற்கு தலைமை தாங்கிய அதிபர் அனந்தீஸ்வரன் தலைமை உரையில்- மாணவர்களின் கல்விமேம்பாட்டிற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களின் ஆங்கில மொழியறிவு விருத்திக்காக ஆங்கில மொழிவளச் செயற்றிட்டம் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக விசேட பயிற்சி வகுப்புகள் ஆகியன நடத்தப்பட்டு வருகின்றன. தரம் 3 இல் பொப்லெப் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலையின் அபிவிருத்திக்குப் பழைய மாணவர்கள் பெரும் பங்காற்றி வருகின்றனர். பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்பு பாடசாலையின் அபிவிருத்திக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. பாடசாலையின் அபிவிருத்திச் சங்கமும் பாடசாலை அபிவிருத்தியில் முன்னணியில் செயற்பட்டு வருகிறது- என்று கூறினார். விழா நிகழ்வில் மாணவ, மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (ப-78)

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2005

## மஹோற்சவ விவரங்கள்

| | |
|---|---|
| புரட்டாதி 16 ஆம் நாள் (02.10.2005) ஆதி வாரம் - | மாலை 4.00 மணிக்கு கர்மாரம்பம், அனுக்ஜை, சாந்திவழிபாடு. |
| புரட்டாதி 17 ஆம் நாள் (03.10.2005) சோம வாரம் - | முற்பகல் 10.15 மணி கொடியேற்றம் (துவஜா ரோஹணம்) சூரியபரிதிச் சேவை. |
| - | மாலை மஹாயாகாரம்பம் அன்னச்சேவை |
| புரட்டாதி 18 ஆம் நாள் (04.10.2005) மங்கள வாரம் - | காலை கேடகம் (நவராத்திரி விரதாரம்பம்) |
| - | மாலை சேஷ சயனச் சேவை. |
| புரட்டாதி 19 ஆம் நாள் (05.10.2005) புத வாரம் - | காலை கேடகம், மாலை கருடசேவை |
| புரட்டாதி 20 ஆம் நாள் (06.10.2005) குருவாரம் - | காலை கேடகம், மாலை அனுமச் சேவை |
| புரட்டாதி 21 ஆம் நாள் (07.10.2005) சுக்கிர வாரம் - | காலை கேடகம், மாலை பூந்தண்டிகைச் சேவை |
| புரட்டாதி 22 ஆம் நாள் (08.10.2005) சனிவாரம் - | காலை கருடசேவை, மாலை கஜேந்திர சேவை |
| புரட்டாதி 23 ஆம் நாள் (09.10.2005) ஆதிவாரம் - | காலை கேடகம், மாலை சப்பரம் (வெண்ணெய் தாளி சேவை) |
| புரட்டாதி 24 ஆம் நாள் (10.10.2005) சோமவாரம் - | காலை கருடசேவை, மாலை அஸ்வ சேவை |
| புரட்டாதி 25 ஆம் நாள் (11.10.2005) - | மங்களவாரம் காலை 8.00 மணி வசந்தமண்டப பூஜை, |
| - | முற்பகல் 10.00 மணி இரதோற்சவம் |
| - | நண்பகல் 12.00 மணி இரதவரோஹணம் |
| - | நண்பகல் 12.30 மணி மஹா ஆசீர்வாதம், மாலை கருடசேவை. |
| புரட்டாதி 26 ஆம் நாள் (12.10.2005) புதவாரம் - | காலை 7.30 மணி வசந்தமண்டபப்பூஜை |
| - | காலை 9.00 மணி சந்திரபுஷ்கரணியில் தீர்த்தோற்சவம் திருவோண தீபபூஜை. மஹாயாக கும்பாபிஷேகம், விஜயதசமி மானம்பூ உற்சவம். |
| - | மாலை துவஜாவரோஹணம், சந்திர பிறைச் சேவை. |
| புரட்டாதி 27 ஆம் நாள் (13.10.2005) குருவாரம் - | காலை காசி யாத்திரை நிச்சயதார்த்தம், |
| - | மாலை திருக்கல்யாணம், பூந்தண்டிச் சேவை. |
| புரட்டாதி 28 ஆம் நாள் (14.10.2005) சுக்கிரவாரம் - | மாலை திருவூஞ்சல், பூந்தொட்டிச் சேவை. |
| புரட்டாதி 29 ஆம் நாள் (15.10.2005) சனிவாரம் - | காலை கருடசேவை, மாலை கருடசேவை. |
| புரட்டாதி 30 ஆம் நாள் (16.10.2005) ஆதிவாரம் - | மாலை வதிரி விருஷ யோக நாராயண உற்சவம். |
| புரட்டாதி 31 ஆம் நாள் (17.10.2005) சோமவாரம் - | காலை மஹாலஷ்மி அபிஷேகம். |
| - | மாலை சுமங்கலி தீப பூஜை, உற்சவம். |
| ஐப்பசி 01 ஆம் நாள் (18.10.2005) மங்களவாரம் - | காலை பிராயச்சித்த அபிஷேகம் வாகன பூஜை |
| - | மாலை ஸ்ரீ ஆஞ்சநேயா அபிஷேகம், பொங்கல், உற்சவம். |

**முற்பகல்**

காலை சந்தி பூஜை : 9.00 மணி
ஸ்தம்ப பூஜை : 9.30 மணி
வசந்தமண்டப பூஜை : 10.15 மணி

**பிற்பகல்**

சாயரட்சை பூஜை: 3.30 மணி
இரண்டாம் கால பூஜை: 3.45 மணி
ஸ்தம்ப பூஜை : 4.30 மணி
வசந்தமண்டப பூஜை: 5.15 மணி

(பழைய நேரப்படி நடைபெறும்)

(சி-45097)
(21.17.15)

ஆதீன மஹாசபை
யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் யாழ்ப்பாணம்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
08 - 12 - 1937



மறைவு
17 - 08 - 2005

திருமதி பரராஜசிங்கம் கிருஷ்ணவதி

மாதமொன்று போனதெமக்கு
யுகம்போலும் உள்ளது
அம்மா!
மா தருக்ககற்றி
மாதர் குல மாணிக்கமாய்
மாநிலத்தே நீ வாழ்ந்தாய்
அம்மா!
கலங்கரை விளக்கெனவே
வாழ்ந்த நீ
காரிருள் சூழ்ந்ததென
கலங்கி நாம் நிற்கவே
காவியம் ஆனாய்
அம்மா!

நிலையில்லா வாழ்க்கையென
நாமறிந்த போதிலும்
நிலைகலங்கி நிற்கின்றோம்
அம்மா!
உன் நினைவுகள்
எம் மனதினில்
என்றென்றும் வாழ்ந்தெம்மை
ஏற்றி வைக்கும்
அம்மா !
உங்கள் ஆத்மா இணைநிழலை
அடைந்து மேன்மை பெற்றிடவே
எங்கள் இறைவன் இணையடியை
இறைஞ்சி வணங்கி வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
J.T.Transport
135, Wolfendhal street,
Colombo -13

(40013)


## பாரதி விழா

யாழ்ப்பாணம்,செப்.16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினர் நடத்தும் பாரதிவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவரின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனும் தொடக்கவுரையை கல்லூரி அதிபர் நோயல் ஏ. விமலேந்திரனும் சிறப்புரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவர்.

சிறப்பு நிகழ்வுகளாக பட்டிமன்றம், மூன்றாம் நிலை அரங்க ஆற்றுகை, நாட்டிய அரங்கு, பாரதி பாடல் இன்னிசை விருந்து என்பன இடம்பெறவிருக்கின்றன. (202)

## சித்த மருத்துவ கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம்,செப்.16

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபை, சித்தமருத்துவக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். மாநகர சபை சித்த மருத்துவப் பகுதியில் நடைபெறவுள்ளது.

பிரதம சித்த வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி செல்வி க.பொன்னையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் கலந்துகொள்வார்.

கண்காட்சியில் நோய்கள் பற்றிய விளக்கம், சித்த ஆயுள்வேத மருந்துகள், மூலிகைகள் பற்றிய விளக்கம் அளிக்கப்படுவதுடன் சித்த ஆயுள்வேத நூல்களும் காட்சிக்கு வைக்கப்படும். (111-202)


**G.A.Q யாழ்ப்பாணம், பேராதனை**

இப்பல்கலைக்கழகங்களுக்கான புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
* 1st IN COM. புதிய பிரிவு ஆரம்பம்: (24.09.2005) 9 மணி
* A/L பரீட்சையில் கலை,வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் இப்பிரிவுகளில் 3 பாடங்களில் சித்தி எய்தியவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆவர்.
* விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி - S.அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(39956)
(21.32.17.15)



**G.A.Q. 1st in Commerce 2005/2007**

**யாழ். பேராதனை**

க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்
விண்ணப்ப முடிவுத்திகதி:- 30.09.2005
விரிவுரைகள் 01.10.2005 இல் ஆரம்பமாகின்றன.
விவரங்களுக்கு -
இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-45114)
(21.32.17.15)



**யாழ் மாவட்ட மாணவர்களுக்கு சர்வதேச ரீதியிலான வங்கியியல் கற்கைநெறிகள்**

**B.Sc.(Hons) Degree &ACIB**
**DBF, ACBF, CBF (CIB/IBSL)**
University Of Manchester (UMIST)
Chartered Institute Of Bankers, London (CIB)
Institute Of Bankers Of Sri Lanka (IBSL)

Five (5) Internationally recognized professional Qualifications over 3 years **Wish To Register?**

Register With the IBSL Through JAFFNA COLLEGE

Do you Have G.C.E.(A/L) 2 passes and G.C.E.(O/L) 6 PASSES WITH 5 credits including Maths /Commerce & Accounts And Language (Tamil / English)

B.Sc (Hons) (UMIST)with ACIB (London) (6 Months)

CBF Certificate In banking & Finance (6 months)

ACBF Advanced certificate in banking & finance (6 Months)

DBF Diploma In Banking & Finance (6 Months)

Exams Held Twice a year March & September

Up to DBF Study-sit Exam In TAMIL or ENGLISH

விண்ணப்பமுடிவு திகதி: 17-09-2005

INQUIRIES/ REGISTRATION
DIRECTOR
**JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT**
464, Hospital Road, Jaffna.



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சுகந்தினி சிவகுமார் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி விநாயகமூர்த்தி பரமேஸ்வரி
அவர்கள் 18.08.2005 அன்று சிவபதமடைந்தமையையிட்டு இன்று நினைவு கூருவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
(39993)(21.11.45)



**விமானம் மற்றும் கப்பல் மூலம்**
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20% விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=

**திருமுருகன் கொம் நெற்**

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166,ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993



விசுவமடுவில் நடந்த மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டியில் பற்கேற்க காளைகள் தயார் நிலையில் நிற்பதையும் போட்டியில் காளைகள் ஓடிக் கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

### யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த

# நூறுக்கு மேற்பட்ட காளைகள் களமிறங்கிய மாபெரும் போட்டி

## விசுவமடு சவாரித் திடலில் நடந்தது

விசுவமடு, செப்.16

யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 65 சோடிகளுக்கு மேற்பட்ட காளைமாடுகள் பங்குபற்றிய மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி விசுவமடு சவாரித் திடலில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சவாரிச் சங்கத் தலைவர் ஐ.அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத்தேசியக் கொடியை தமிழீழ காவல் பணிமனையின் வட்டக்கச்சி துணைப் பொறுப்பாளர் இ.சிறிதரன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் 13 மாடுகள் கைக்கொடி சவாரியிலும் பங்குபற்றின.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற காளைகளுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.

வெற்றியீட்டிய காளைகளின் உரிமையாளர் விவரம் வருமாறு:-

'அ'பிரிவு

எஸ்.தயா - வட்டுக்கோட்டை, கே.ரவி- கிளிநொச்சி, எஸ்.சிவா- பெரியவிளான், மு.செந்தில்குமார்-பிரமந்தனாறு.

'ஆ' பிரிவு

சி.பகீரதன் - பூநகரி, த.குகன்-வட்டக்கச்சி, எஸ்.சிவரூபன் - வட்டுக்கோட்டை, எஸ்.நேசன்-புத்தூர்.

'இ' பிரிவு

அ.சதீஸ்குமார் - திருநெல்வேலி, ந.நிசாந்தன் - வவுனிக்குளம், ம.மயில்வாகனம் - அளவெட்டி, ந.மகிந்தன் - முல்லைத்தீவு.

'ஈ' பிரிவு

சி.திருச்செல்வம் - முறிகண்டி, ஏ.அஜந்தன் - வட்டக்கச்சி, சி.அமிர்தன் - மன்னார், எஸ்.ரஜிகரன் - வட்டக்கச்சி.

கைக்கொடிப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்:-

ந.நகுலேஸ்வரன் - முரசுமோட்டை, சி.சுப்பிரமணியம் - இராமநாதபுரம், எஸ்.செந் தில்குமார் - பிரமந்தனாறு.

இந்தப் போட்டிகளுக்கு கண்டாவளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களான இராஜரட்ணம், சி.பரமதாஸ் ஆகியோரும் மாட்டுவண்டில் சவாரிச் சங்கத்தைச் சேர்ந்த தணிகாசலம் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். (3-352-402-203)

## இன்றும், நாளையும் மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் 16,19,20,23 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த வீர, வீரங்கனைகள் பங்கேற்கின்றனர்.

சுமார் 200 இற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இப்போட்டியில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (3-190)

## மரதன், சைக்கிள் ஓட்ட போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம்,செப்.16

சுண்டுக்குழி சனசமூக நிலையத்தின் 77 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு உள்ளூர்க் கழகங்களுக்கு இடையிலான மரதன் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 6 மணியளவில் இடம் பெறவுள்ளன.

இப்போட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-190)

## வலி.தெற்கு சனசமூக நிலையங்களுக்கான உதைபந்தாட்ட, கிரிக்கெட் ஆட்டங்கள்

வலி.தெற்கு, செப்.16

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் சனசமூகநிலையங்களுக்கிடையிலான துடுப்பாட்ட, உதைபந்தாட்ட போட்டிகள் தற்சமயம் நடைபெற்றுவருகின்றன.

குப்பிளான் வடக்கு ஏழாலை விக்னேஸ்வரா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டிகளில் 18 சனசமூக நிலைய விளையாட்டு அணிகள் பங்குபற்றிவருகின்றன.

இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் (இணுவில் கந்தசுவாமி கோயிலடி) 16 சனசமூக நிலையங்களின் விளையாட்டு அணிகள் பங்குபற்றும் துடுப்பாட்ட மென்பந்துப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நாளையும் மறுநாளும் உதைபந்தாட்ட, துடுப்பாட்ட மென்பந்து போட்டிகளுக்கான இறுதிப்போட்டிகள் நடைபெறும். (3-152)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.16

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் 14ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கழக விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

- பிற்பகல் 3.30 மணி - ஸ்கந்தா ஸ்ரார் வி.க. எதிர் கலைமதி வி.க.
- மாலை 4.30 மணி - கண்ணகி வி.க. எதிர் கலைவாணி வி.க. (3-203)

* * *

வலி.வடக்கு,செப்.16

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி. தெற்கு சுன்னாகம் பிரதேச சபை சனசமூக நிலையங்களுக்கு இடையே இணுவில் அண்ணா சனசமூக நிலைய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் தாச்சிப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

- இணுவில் அண்ணா சனசமூக நிலையம் எதிர் சுதுமலை கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையம்.
- இணுவில் அண்ணா சனசமூக நிலையம் எதிர் தாவடி காளியம்பாள் சனசமூக நிலையம்.

(3-86)

வலி.வடக்கு,செப்.16

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி. தெற்கு சுன்னாகம் பிரதேச சபை சனசமூக நிலையங்களுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் ஏழாலை மத்திய சனசமூக நிலையமும் ஈவினை கலையரசி சனசமூக நிலையமும் மோதுகின்றன. (3-86)

* * *

வலி.வடக்கு,செப்.16

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.தெற்கு சுன்னாகம் பிரதேச சபை சனசமூக நிலையங்களுக்கு இடையே நடத்திவரும் கரபந்தாட்டச் (செற் -அப்) போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

- இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையம் எதிர் ஏழாலை மத்திய சனசமூக நிலையம்.
- மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சனசமூக நிலையம் எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையம்.

இரவு 7 மணிக்கு மின்னொளியில் கோட்டைக்காடு சைவ வாலிபர் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறும் கரபந்தாட்டம் (ஓவர்) போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையமும் இணுவில் கலாஜோதி சனசமூக நிலையமும் மோதுகின்றன.

இலங்கை ரெனிஸ் சங்கத்தினரால் கடந்த 3ஆம், 4ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மினி ரெனிஸ் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாவது இடத்தினைப் பெற்ற யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியினரும் பெண்கள் பிரிவில் மூன்றாவது இடத்தினைப் பெற்ற யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியினரும் தமது பயிற்றுநர், பொறுப்பாசிரியருடன் எடுத்துக்கொண்ட படத்தினைக் காணலாம். (3190)





### ஜனசக்தி உதைபந்தாட்டம்

## நவசக்தி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,செப்.16

ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வடமராட்சிப் பகுதிக்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்

- மற்றொரு காலிறுதிப் போட்டியில் சமனிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி பெற்ற கரவெட்டி நவ சக்தி விளையாட்டுக் கழகம் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவுத் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும், கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டம் தொடங்கி முடியும் வரை ரசிகர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. முதல் பாதி ஆட்டத்தின் ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் இரு அணிகளுக்கும் கோல் பெறுவதற்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், இரு அணி வீரர்களும் அதனைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இடைவேளை வரை இரு அணிவீரர்களும் கோல் ஒன்றைப் பெறுவதற்குக் கடுமையாகப் போராடிய போதும் அவர்களால் அதனைச் சாதிக்க முடியவில்லை. இந்த நிலையில் இரு அணியும் கோல் பெறாத நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியபோது மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பந்து மாறி மாறி இரு அணிகளினதும் கோல் பிரதேசத்துள் காணப்பட்ட போதும் அவர்களால் கோல் எதனையும் போடமுடியவில்லை.

இரு அணி வீரர்களுக்கும் கோல் பெறுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அந்த அந்த முன்னணி வீரர்கள் அவற்றைக் கோட்டை விட்டனர். இதனால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.

இதனால் ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இதில் நவசக்தி விளையாட்டுக் கழகமும் 4:2 என்ற கோல் அடிப்படையில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இவ்வணி அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது. (3-410)

## டயமன்ஸ் வி.கவும் அரையிறுதிக்குத் தகுதி

இச்சுற்றுப் போட்டியில் நடந்த மற்றோர் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி.கவும் கொற்றாவத்தை சிவானந்தா வி.கவும் மோதியதில் டயமன்ஸ் வெற்றி பெறறு அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டம் தொடங்கி 7ஆவது நிமிடத்தில் சிவானந்தா முன்னணி வீரன் ரஜிகரன் தனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தைத் தக்க முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இதனையடுத்து, ஆட்டம் மிகவும் விறுவிறுப்படைந்தது. இந்நிலையில், ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் டயமன் விளையாட்டுக்கழக வீரர் தினேஷ் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டு போட்டியைச் சமப்படுத்தினார். ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்துவதற்கு ஒரு சில நிமிடங்கள் இருக்கும் போது டயமன்ஸ் விளையாட்டுக்கழக மூத்த வீரரும் அனுபவசாலியுமான தர்மேந்திரா மேலும் ஒரு கோலைப் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

இந்நிலையில், ஆட்டம் 2:1என்ற கோல் கணக்கில் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின்னரான ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதிக்கமே மோலோங்கி யிருந்தது. அவ்வணியினர் அடுத்தடுத்து 5 கோல்களைப் போட்டனர். இறுதியில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் 7:1 என்ற கோல் களைப் பெற்று சிவானந்தன் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டியில் சிவானந்தா அணியினருக்கு கோல் பெறுவதற்குப் பல சந் தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அவர்கள் அதனைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இவ்வணி வீரர் விதிகளுக்கு முரணாக விளையாடியமையால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கை செய்யப்பட்டார்.

இப்போட்டிக்கு நடுவராக கதிர்காமராஜூம் துணை நடுவர்களாக ரஜனிகாந், மதியழகன் ஆகியோர் கடமையாற்றினர்.

அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம், வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது. (3-410)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

லான்சர் ரக (**Custom 90** ) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. கிழமை நாள்களில் காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை தொடர்புகொள்ளலாம். தொடர்பு: **T.P.:** 021 222 7893. (39672)

**Honda** 650 **W** ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **M.Kisho 32/16, press Road, Jaffna. T.P 0777-575701.** (40024)

## தவறிவிட்டது

5ஆம் வட்டாரம், நயினாதீவைச் சேர்ந்த பரமேஸ்வரன் தனுஷா என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. (857072367V) கடந்த 26.09.2005 திருநெல்வேலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவும். 860, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P.** 0773126410. (40022)

நாகலிங்கம் நாகரத்தினம் என்பவரது தே. அ. அட்டை (இல. 570613383), சாரதி அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் சிட்டை என்பன சக்கலாவத்தை டேவிற்காம்பு குளம்கரை ஊடாக மூத்த விநாயகர் கோயில் எல்லைக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கரணவாய் வடக்கு, கொக்காம்பாலை, கரவெட்டி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (40006)

## தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்று இயங்குவதற்குத் தேவையான 2500 சதுர அடி பரப்புக் கொண்ட கட்டடம் ஒன்று தேவைப்படுகின்றது. தொடர்பு: **T.P.No.** 021-222 2201. (39920)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில்-கச்சேரி, பாடசாலைகள், கோவில்கள் மத்தியில் ராசாவின் தோட்ட வீதியில் 2½ பரப்புக் காணியில் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. **T.P.: 0777 6220051.** (40034)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

*10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.*

## தமிழ்த் தினவிழா

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் தமிழ்த் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை தமிழ் மன்றத் தலைவர் செ. செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம் கலந்து கொள்வார்.

சிறப்பு நிகழ்வுகளாக சிறுவர் நாடகம், வில்லிசை, பட்டிமன்றம் என்பவை இடம்பெறவிருக்கின்றன. (202)



உ

உரும்பிராய்

கருணாகரப் பிள்ளையார் கோயில்

## தேர்த்திருவிழா

இன்று(16 - 09 - 2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி

*நாதஸ்வர இசை*

| | |
|---|---|
| இணுவில் | ச.இராசன் குழுவினர் |
| இணுவில் | ப.சிவதாஸ் குழுவினர் |
| கோண்டாவில் | வீ.கே.கானமூர்த்தி குழுவினர் |
| ஈழநல்லூர் | சு.பாலமுருகன் குழுவினர் |
| கலாபூஷணம் | கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர் |

நாளை (17-09-2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் வழக்கம் போல சிறப்பாக இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

- உபயகாரர்கள் -திருப்பணிச் சபையினர்,
கருணாகரப்பிள்ளையார் கோயில்,
உரும்பிராய்.

(40021) (21.17.45)

# பரதநாட்டிய அரங்கேற்றம்






நாட்டிய கலாவித்தகர் **ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்ஷனன்** அவர்களின் மாணவி **செல்வி சங்கீதா இராமநாதன்** அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்

காலம் : நாளை (17-09-2005) சனிக்கிழமை காலை 10 மணி

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்

தலைமை : **நடராஜா இரவிராஜ்** (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

பிரதம விருந்தினர் : **திருமதி சாந்தினி சிவனேசன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)

கௌரவ விருந்தினர் : **சொலமன் சூ.சிறில்**
(தலைவர், யாழ்ப்பாண மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம்)

சிறப்பு விருந்தினர் : **கனகரத்தினம் கேசவன்**
(ஜே.பி.யூ.எம் சட்டத்தரணியும் பிரசித்தநொத்தாரிசும் பதில் நீதிபதி)

**அரங்கக் கலைஞர்கள்**

நட்டுவாங்கம்: **ஸ்ரீமதிஆனந்தஜோதி தர்ஷனன்**

பாட்டு: **திரு.ஸ்ரீதர்ஷனன்**
(விரிவுரையாளர், இசைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

மிருதங்கம்: **லயஞானவாரிதி திரு.எஸ். மகேந்திரன்**
(விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

வயலின்: **திரு.ச.திபாகரன்**

சாயிபாஷா: **திரு.மூ.கண்ணன்**

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.திருமதி இராமநாதன்**

(39883)(53)

கண்டி வீதி, கொடிகாமம்.

# யாழ் - கொழும்பு - யாழ்

A/C பஸ் ஆசனப்பதிவுகளுக்கு

## திரீஸ்டார் ஹோட்டல்

இல.162 - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7125, 3817

# UNIT

Proudly with Indian experienced Technology

**P4 Complete Set @ Colombo Price**

- * Genuine warranty Replacement
- * One 2 One replacement
- * No Charges for warranty Claims

**FREE : UPS, SCREEN FILTER, DUSTCOVER, MOUSE PAD & ETC.**

347, K.K.S. Roacd, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720, 0773134737

# சேவை நலன் பாராட்டு விழா

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூட்டுறவுச் சேவையாற்றி இளைப்பாறிச் சென்ற தோழர்கள்



தோழர். திரு . சு. சேய்மானந்தன்
(கிளை மேற்பார்வையாளர்)



தோழர். திரு . ச. செல்வரத்தினம்
(கிளை மேற்பார்வையாளர்)



தோழர். திரு . வ . குணபாலசிங்கம்
(விற்பனை உதவியாளர்)

ஆகியோருக்கு நாளை(17.09.2005) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் தோழர் திரு. செ. செல்வக்குமாரன் அவர்கள் தலைமையில் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இவர்களின் சேவையைக் கௌரவித்து எமது தொழிற்சங்கத்தினால் ஓர் சேவை நலன் பாராட்டு விழாவை நடத்தி விழா நாயகர்களை பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(39995)(51-)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கிளை - நல்லூர் ப.நோ. கூ. சங்கம்.

# அமெரிக்க அதிபருடனான பேச்சில் வாஜ்பாய் பற்றி மன்மோகன் விமர்சனம்

## இந்திய எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்

புதுடில்லி,செப்.16

'அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் நடந்த பேச்சுவார்த்தையில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பற்றி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விமர்சனம் செய்துள்ளார். உள்நாட்டு அரசியல் விவகாரத்தை உலக அரங்கில் எழுப்பியது தவறு' என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எதிர்க் கட்சி கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நியூயோர்க் சென்றுள்ளார். நேற்று முன்தினம் காலை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் அவர் பேச்சு நடத்தினார். 30 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு நடந்தது.

இதுகுறித்து இந்தியப் பிரதமருடன் சென்றுள்ளவரான இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அணுசக்தி மூலப்பொருள்களும், கருவிகளும் இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா விதித்த தடை விரைவில் நீக்கப்படும். - இவ்வாறு அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்தியப் பிரமரிடம் உறுதியளித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன் சிங், ஆயுத மற்ற அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை இந்திய நாடாளுமன்றம் முழுமையாக ஆதரிக்கிறது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது வியப்பளிக்கிறது. என்று இந்தியப் பிரதமர் பதிலளித்தார் .

- இவ்வாறு வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் கூறினார்.

இதனையடுத்தே அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் நடந்த சந்திப்பில் 'உள்நாட்டு அரசியல் விவகாரங்களை வெளிநாட்டில் விவாதிக்கக் கூடாது' என்ற மரபை பிரதமர் மன்மோகன் சிங் மீறிவிட்டார் என்று இந்திய எதிர்க்கட்சிகள் கண்டனக் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளன.

இதுகுறித்து பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் முக்தார் அப்பாஸ் நக்வி கூறியதாவது:-

பிரதமர் மன்மோகன் சிங் இந்திய அரசியலில் புதிய மரபுகளை உருவாக்குகிறார். இது நாட்டிற்கு மிகவும் ஆபத்தானது. பிரதமர் மற்றும் மூத்த தலைவர்கள் வெளிநாட்டுப் பயணத்தில் உள்நாட்டு அரசியல் பற்றி விமர்சனம் செய்யக் கூடாது என்ற உயரிய மரபை மன்மோகன் சிங் மீறி இருக்கிறார்.

முன்னர் ஒருமுறை பிரதமர் மன்மோகன் சிங் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விழாவில் இந்தியாவில் நடந்த ஆங்கிலேய ஆட்சியைப் புகழ்ந்து பேசி இந்தியாவுக்கு இழிவு ஏற்படுத்தினார்.

சென்னையில் நடைபெற இருக்கும் பா.ஜ.க, தேசிய செயற்குழுவில் இதுபற்றி நாங்கள் விவாதிப்போம்.

இவ்வாறு முக்தார் அப்பாஸ் நக்வி கூறினார்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் விமர்சனத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆனால், பிரதமர் மன்மோகன் சிங்கின் விமர்சனம் முழுக்க முழுக்க சரியானது' என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார். (ஒ)

# மன்மோகன் - முஷாரப் சந்திப்பு

ஐ. நா.சபை கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இந்தியப் 'பிரதமர் மன்மோகன் சிங் அங்கு தேநீர் விருந்தளித்தார். அந்த விருந்தில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கலந்து கொண்டார். இந்திய அதிகாரிகளை முஷாரப்பிற்கு மன்மோகன் அறிமுகம் செய்து வைத்தார்.பின்னர் காஷ்மீர் பிரச்சினை உட்பட பல பிரச்னைகள் குறித்து இரு தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தைக்குப் பின் இருவரும் கூட்டறிக்கை வெளியிட்டனர். பாகிஸ்தான் வருமாறு மன்மோகன் சிங்கிற்கு முஷாரப் அழைப்பு விடுத்தார். இதனை மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்டார். (ஒ)

உலக அரங்கில்

# தீவிரவாதத்தைக் கையாள்வதில் அதிக கவனம் தேவை - முஷாரப்

நியூயோர்க்,செப்.16



''உணர்ச்சிவசப்பட்டு மோதலில் ஈடுபடு பவர்கள் வேறு, தீவிரவாதிகள் வேறு. அவர்களை சரியாக வேற்றுமைப்படுத்தி, அடக்குவதில் தனித்தனியான முறைகளை கையாள வேண்டும்,'' இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள பாக்., அதிபர் முஷாரப், அங்கு பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொண்டார். 'நம்பிக்கையு டன் கூடிய பேச்சு வார்த்தை , அமைதிக்கான ஒத்துழைப்பு' என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ஒட்டுமொத்தமாக அனைத்தையும் தீவிர வாதம் என நினைத்து விடகூடாது. மதரீதியாக உணர்ச்சிவசப்பட்டு மோதலில் ஈடுபடுபவர்கள் வேறு, தீவிரவாதிகள் வேறு. இவர்களை சரியாக கணித்து, அவர்களை அடக்கும் விஷயத்திலும் தனித்தனியான முறைகளை கையாள வேண்டும். தீவிரவாதத்தை அடக்க ராணுவத்தை பயன்படுத்த வேண்டும். அதே நேரத்தில் மதவெறி கொண்டு மோதலில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்த நீண்டகால திட்டத்தை செயல்படுத்த வேண்டும். எதிர்மறையான போக்கு கொண்டவர்களை ராணுவம் கொண்டு அடக்கி விட முடியாது.

வெறியுணர்ச்சியுடன் மோதலில் ஈடுபடுவோர் மீது ராணுவ நடவடிக்கை எடுத்தால் நேரம்தான் விரயமாகும். அதே நேரத்தில் நீண்ட காலத்திற்கு பலன்தரக் கூடிய விரிவான திட்டங்களை செயல்படுத்தினால், இதற்கு நல்ல பலன் கிடைக்கும். இவ்வாறு முஷாரப் கூறினார். (ஒ)

# பின்லேடனுக்கு உடல் நலம் பாதிப்பு; அமெரிக்க ராணுவ அதிகாரி தகவல்

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறது' இவ்வாறு ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

லண்டனிலிருந்து வெளிவரும் அரபு பத்திரிகை ஒன்று, ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி கலோனல் டொன் மெக்கிராவின் செவ்வியை வெளியிட்டுள்ளது.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

சர்வதேச தீவிரவாதியும், அல்கெய்டா தலைவருமான ஒஸாமா பின்லேடனுக்கு உடல்நிலை சரியில்லை. அவர் தற்போது மருத்துவ உதவிகளை எதிர்பார்க்கிறார். மருத்துவ உதவி பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். எந்த நோயால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரியாது. பாகிஸ்தான் முன்னர் அறிவித்தபடி சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்ப தும் தெரியவில்லை.

இவ்வாறு டொன் மெக்கிரா கூறியுள்ளார்.

பின்லேடன் குறித்த தகவல்கள் அமெரிக்க இராணுவத்துக்கு எப்படி கிடைத்தன என்பது பற்றியும் அவர் தெளிவுபடுத்த மறுத்துவிட்டார்.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ''ஒஸாமா பின்லேடன், அவர் தங்கியிருந்த டோரா போரா மலைப்பகுதியிலிருந்து 2001ஆம் ஆண்டிலேயே தப்பிவிட்டார். அவருக்கு முஜாஹிதீன் தீவிரவாத அமைப்பின் தலைவர் மவுல்வி யூனுஸ் காலிஸ் உதவியுள்ளார்'' என்றார். (ஒ)

# மனிதகுல இருப்பை கேள்விக்குறியாக்கும் ஓசோன் படலத்துவாரம்

பிரபஞ்சத்தில் . உள்ள கோள்களில் பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன என்று இதுவரை அறியப்பட்டுள்ளது. பூமியில் இயற்கையாகவே உள்ள வளிமண்டல அமைப்பு, திரவ நிலையில் உள்ள நீர், சிறப்பான வெப்பநிலை என்பது பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்குச் சிறப்பான காரணிகளாக உள்ளன.

ஆனால் தற்காலத்தில் பூமியின் வெப்ப நிலை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. மனிதர்களுக்குப் புதுப்புது நோய்கள் ஏற்படுகின்றன.

வளி மண்டலத்தில் உயிரினங்களின் சுவாசத்துக்கு அவசியமான பிராணவாயுவின் அளவு குறைந்துவருகின்றது. கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கின்றது.

இதனால், பூமியானது உயிரினங்கள் எதுவும் வாழமுடியாத பாலைவனமாக மிக வேகமாக மாறிவருகின்றது.

## இன்று உலக ஓசோன் தினம்

### இயற்கையும் மனிதனும்

ஆதிகால மக்கள் இயற்கையை அனுசரித்து வாழ்க்கை நடத்தினர்.

நாளடைவில் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனித நாகரிகம் வளர்ந்தது. மனிதனின் தேவைகள் அதிகரித்தன. இயற்கையுடன் மனிதன் போராட ஆரம்பித்தான். இப் போராட்டத்தின் இறுதியில் மனிதன் தானே வென்றதாகப் பாசாங்கு செய்தாலும் ஈற்றில் வெற்றி பெறுவது இயற்கையாகவே உள்ளது.

### ஓசோன் படலம்

உயிரினங்களின் சுவாசத்துக்கு அவசியமான பிராண வாயுவைப் போன்றே ஓசோன் வாயுவும் ஒட்சிசன் அணுக்களாலானது. ஆனால், பிராணவாயு மூலக்கூறு இரண்டு ஒட்சிசன் அணுக்களைக் கொண்டது.

ஓசோன் வாயு மூலக்கூறு மூன்று ஒட்சிசன் அணுக்களைக் கொண்டது. எனவே, பிராண வாயுவின் இரசாயனக் குறியீடு $O_3$ ஆகும்.

வளி மண்டலத்தில் ஓசோன் வாயுவானது கடல் மட்டத்தில் இருந்து ஏறக்குறைய 10 கிலோ மீற்றர் தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரையான, நிலையான வளி மண்டலத்தில் காணப்படுகின்றது. பூமியின் வளிமண்டலத்தைச் சூழ்ந்து பாதுகாப்புப் படையாகக் காணப்படுவதால் ஓசோன் படலம் என அது அழைக்கப்படுகின்றது.

### பாதுகாப்பு

பூமியில் வாழும் எல்லா உயிரினங்களினதும் சக்தி முதல் சூரியன் ஆகும். ஆகவே, பூமியில் உயிரினங்களின் இருக்கைக்குச் சூரிய ஒளி மிகவும் அவசியமாகின்றது. ஆனால், சூரிய ஒளிக்கதிருடன் மிகவும் சக்தி வாய்ந்ததும் உயிரினங்களுக்குக் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுமான புற ஊதாக் கதிர்களும் வெளிவருகின்றன. சூரிய ஒளிக்கதிருடன் புற ஊதாகக் கதிர்களும் பூமியை வந்தடைந்தால் மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் கூடுதலான பாதிப்புகள் எற்படும். பெரும்பாலான உயிரினங்கள் அழிவடைய வேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால், ஓசோன் வாயு புற ஊதாக் கதிர்களை உறிஞ்சும் தன்மை உடையது. ஆகவே, பூமியில் கடல் மட்டத்தில் இருந்து ஏறக்குறைய 10 கிலோமீற்றர் தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரையான வளிமண்டலத்தில் காணப்படுகின்ற ஓசோன் படலம் புற ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடைவதைத் தடுக்கின்றது.

### ஓசோன் துவாரம்

தற்காலத்தில் மனிதனின் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மூலம் வளிமண்டலத்தினுள் விடுவிக்கப்படுகின்ற நைத்திறேற் ஒட்சைட் ($N_2O$) CFC என அழைக்கப்படுகின்ற குளோரோ புளோரோ காபன் CTC என அழைக்கப்படுகின்ற காபன் ரெற்றா குளோரைட் போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் ஓசோன் வாயுவுடன் தாக்கமுற்று ஓசோன் வாயுவை அழிப்பதனால் ஓசோன் படலம் குறைகின்றது. இது ஓசோன் படலத்தினது துவாரம் என அழைக்கப்படுகின்றது.

### தீமைகள்

ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்படுவதால் சூரிய ஒளிக்கதிருடன் புற ஊதாக் கதிர் போன்ற நச்சுக் கதிர்களும் பூமியை வந்தடைகின்றன. இதனால் பின்வரும் பாதிப்புகள் ஏற்படும்.

தோல் கரும்புள்ளிகள், தோல் வயதடைதல், தோல் புற்றுநோய், கண்களில் கட்காச நோய், மனிதனில் நோய் எதிர்ப்புச்சக்தி குறைதல். அதாவது, மனித நிர்ப்பீடனத் தொகுதியின் செயற்பாடு பாதிக்கப்படுதல். தாவரங்களின் வளர்ச்சி குன்றுதல்.

புறஊதக் கதிர்கள் சக்தி கூடியவை ஆதலால், கடல் நீரின் மிகக்கூடிய ஆழத்திற்கு ஊடுருவி தாவரப் பிளாந்தன்களை அழிக்கும். இதனால் கடல்வாழ் உயிரினங்கள் அழிவடையும்.

கடல் வாழ் தாவரப் பிளாந்தன்கள் உட்படப் பூமியின் தாவரங்கள் அழிக்கப்படுவதால் பூமியின் வெப்பநிலை உயரும். காலநிலை மாற்றங்கள் எதிர்பாராதவிதமாக பனிக்கட்டிப் பாறைகள் உருகுவதனால் கடல் மட்டம் உயரும். இதனால் மாலைதீவு, இலங்கையின் சில கடற்கரைப் பிரதேசங்கள் கடல் நீரினால் மூழ்கும் அபாயம் ஏற்படும்.

### ஓசோசன் படலத்தைப் பாதுகாத்தல்

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெரும்பாலானவை ஓசோன் படலத்தினை அழிக்கும் வாயுக்களைக் கூடுதலாக வெளிவிடுகின்றன என்று கூறப்படுகின்றது. எனினும், அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான உலக மாநாட்டை 1985 ஆம் ஆண்டு வியன்னாவில் நடத்தின. ஓசோன் படலத்தினை அழிக்கும் பதார்த்தங்களை உற்பத்திசெய்தலை குறைப்பது தொடர்பாக மொன்றியல் கூட்டு ஒப்பந்தம் 1987 இல் கைச்சாத்திடப்பட்டது. ஓசோன் படலத்தினைப் பாதுகாப்பதற்குப் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

சு.சிவநேசராசன்
ஆசிரியர் -
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

குளோரோபுளோரோகாபன் அற்ற குளிர்சாதனப் பெட்டிகள், காற்று ஒழுங்காக்கிகளைப் பயன்படுத்துதல். குளோரோபுளோரோகாபன் அற்ற வாசனைத் திரவியத் தூவிகள், கிருமி நாசினி விசிறு கருவிகளைப் பயன்படுத்தல். ஹேலோன் தீயணைப்புக் கருவிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

போக்குவரத்து வாகனங்களில் ஓசோன் பாதிக்காத எரிபொருள் பயன்படுத்தல்.

விவசாயத்துறையில் மெதையில் புரோமைட் பயன்படுத்துவதைக் குறைத்தல்.

# பக்தியின் பயன்

ஞானக்கதிர்

சிஷ்யன் ஒருவன் தன் குருவிடம் எல்லாம் விதிப்படிதான் நடக்கும் எனில் பக்தியினால் என்ன பயன்? என வினவினான்.

குரு அதற்கு பதில் கூறாமல், தனது இரண்டு வேட்டிகளை உடனே தோய்த்து வருமாறு, சிஷ்யனிடம் கொடுத்தார்.

சிஷ்யன் அவற்றைத் தோய்த்து எடுத்து வந்தான். குரு அவற்றுள் ஒன்றை நல்ல வெளிச்சமான, நேராக வெயில் விழும் இடத்தில் உலர்த்தச் சொன்னார். மற்றொன்றை, இருட்டான காற்றோட்டம் சற்றுமில்லாத ஓர் அறையினுள் உலர்த்தச் சொன்னார்.

இரண்டையும் மறுநாள் மதியம் எடுத்துக் கொண்டு, தன்னைப் பார்க்க வருமாறு பணித்தார்.

சிஷ்யனும் அவ்வாறே செய்து, மாறுநாள் இரண்டையும் குருவிடம் கொண்டு வந்தான்.

குரு இரண்டு துணிகளிலும் என்ன வித்தியாசம் இருக்கின்றது எனக் கேட்டார்.

சிஷ்யன் பவ்யமாக, வெயிலில் உலர்ந்த துணி பளீரென்று, மடமடப்பாக நன்றாகக் காய்ந்து உடனே உடுத்தும் வண்ணம் உள்ளது. நிழலில் இருட்டில் போட்ட துணியோ, இன்னும் முற்றும் காயவில்லை. அதுமட்டுமன்றி, முடை நாற்றம் அடிக்கிறது எனக் கூறினான்.

ஒரு புன்சிரிப்புடன் இதுதான் பக்தி உள்ள மனத்திற்கும், பக்தி இல்லாத மனத்திற்கும் உள்ள வித்தியாசம் இதுதான் எனக் கூறினார்.

நன்றி: பக்தி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை
க.பொ.த. உயர்தரம் (2005)

| வர்த்தகம் | | தோற்றியவர் | சித்தி |
|---|---|---|---|
| 1. இ.றமேஷ் | 3 A | 13 | 12 |
| 2. த.குருபரன் | 3 A | | |
| 3. ஆ.ஜெகந்தன் | 3 A | | |
| 4. க.பிரகலாதன் | A 2 B | | |
| 5. சி.வாமணன் | A B C | | |
| 6. க.பிரேம்நாத் | 3B | | |
| 7. ஆ.சுதாயினி | B 2C | | |
| 8. அ.அருட்சந்திரன் | B 2C | | |
| 9. ஸ்ரீ.ஸ்ரீரஞ்சினி | B C S | | |
| 10. ஸ்ரீ.ஸ்ரீராஜ் | B 2S | | |
| 11. கு.ஸ்ரீகுணதீபன் | 3C | | |
| 12. வெ.ராஜராஜன் | 2C S | | |

| கலை | | தோற்றியவர் | சித்தி |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ.சிந்துஜா | A 2B | 14 | 10 |
| 2. வி.பானுஷா | 3B | | |
| 3. மு.நிஷாந்தினி | 3B | | |
| 4. தே.சுஜித்தா | 2B C | | |
| 5. ஆ.செந்துரன் | B 2C | | |
| 6. ஜெ.சுதர்சனா | 3C | | |
| 7. வி.செல்வலஷ்மி | 3C | | |
| 8. அ.மோகன்ராஜ் | 2C S | | |
| 9. வி.நிர்மலாதேவி | 2C S | | |
| 10. க.அரவிந்தன் | 3S | | |

இவர்களை கல்லூரிச் சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.

-யா/சிதம்பரக் கல்லூரிச் சமூகம்.

(சி-45126)(21-26-19-11)



Sethu
STUDY SITE FOR VISUAL CULTURE

வழங்கும்..

தீ.ஜெயதீஸின்

FACES
புகைப்படக் கண்காட்சி

இடம்:
நாவலர் கலாசார மண்டபம்

காலம்:
செப்ரெம்பர் 18 - 20
முற்பகல் 10.00 - பிற்பகல் 6.00 வரை

திறப்பு:
17.09.2005 பிற்பகல் 5.00 மணி

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துவோர்:
ஹரன் புடவையகம்
பலாலி வீதி, திருநெல்வேலி.


## நூலகம் அமைக்கத் திட்டம்

சாவகச்சேரி நகர சபையினர் மீசாலையில் பொது நூலகக் கிளையினை அமைக்கவுள்ளனர்.

இதற்கென காணி கிடைத்தால் இவ் வருடமே கட்டடம் நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(202-117)


## தேவை

பிரபலமான புடைவை நிறுவனத்திற்கு புடைவை விற்பனையில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். நல்ல சம்பளம் வழங்கப்படும். (கவர்ச்சிகரமான)

தொடர்பு:-
விளம்பர இல. 2698
உதயன்,
யாழ்ப்பாணம்.

(40045)(26-11-19)



பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## காணிகள் விற்பனைக்கு

எமது சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் காணிகள் விற்பனை செய்யப்படவுள்ளன.

01. சங்கத்தின் தலைமை அலுவலகமாக செயற்பட்டு வருவதும் பருத்தித்துறையில் அமைந்துள்ளதுமான அம்புலிபக்கலட்டி எனும் வீட்டுடன் கூடிய 2 பரப்பும் 7 குழியும் கொண்ட காணி.
02. பொலிகண்டியில் அமைந்துள்ள அப்பிலாதோட்டம் எனும் ஒரு பரப்புக் காணி.

மேற்படி காணிகளை வாங்க விரும்புவோர் தமது கோரிக்கைகளை எதிர்வரும் 30.09.2005 இற்கு முன்னதாக *பொது முகாமையாளர், பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), சிவன்கோவில் வீதி, பருத்தித்துறை* எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''காணிவிற்பனை'' குறிப்பிட்டு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

பருத்தித்துறையில் அமைந்துள்ள காணியினையும் வீட்டினையும் அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கம்(வ.து)
சிவன்கோவில் வீதி,
பருத்தித்துறை.

(சி/45134)(26-11-19)


## அறிவித்தல்

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 19-09-2005 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றன.

(சி-44127)(26-19-11) பதிவாளர்.


## பெங்களூர் பல்கலைக்கழகத்தில் கற்க வாய்ப்பு
## பிருந்தாவன் கல்லூரி

(முன்னாள் நாஷனல் பெஸ்ட் கிறேற் கல்லூரி)
(அரசினால் அனுமதிக்கப்பட்டதும் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதுமான கல்லூரி)
2ஆவது குறுக்குத் தெரு, பூபாசந்திரா ஆர்.எம்.வி. Extn.
2ஆம் நிலை, பெங்களூர் 94, இந்தியா
தொலைநகல்: info @ brindavan college.com / enquiry @ brindavan college.com
www. brindavan college.com

நிர்வாக நம்பிக்கைப் பொறுப்பாளி / அதிபர் ஆகியோரால் 2005 செப்ரெம்பர் 17ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பிலுள்ள கொழும்பு ஹில்டனில் இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதியும் வழங்கப்படும்.
முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கருத்தரங்கு. தொடர்ந்து உடனடி அனுமதிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| • பி.எஸ்.ஸி. - Microbiology - Biotechnology - Genetics - Computer Science | • B.C.A. • B.Com. • B.B.M. |
| • எம்.எஸ்.ஸி. - Biotechnology - Microbiology - Applied Genetics | • M.C.A. • M.B.A |

- 42 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி கற்கும் வாய்ப்பு
- பெங்களூர் பல்கலைக்கழகப் பாடநெறிகளை மேற்கொள்ள கடந்த 11ஆண்டுகளில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இக்கல்லூரியில் அனுமதி பெற்றுள்ளனர்.
- தவணைக் கட்டண முறைமை அமுல்படுத்தப்படுகிறது.
- 350இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இக்கல்லூரிமூலம் பட்டதாரிகளாகியுள்ளனர்.
- ஒதுக்கீட்டு அனுமதிக் கட்டணம் அமெரிக்க டொலர் 400/- அல்லது அதற்குச் சமமானது.

Company Secretarial services Pvt. Ltd.
285C-1/1, Stanley Tillakaratne Mawatte Jubilee Post, Nugegoda.

கொம்பனி செக்ரற்றேரியல் சேர்விஸஸ் பிறைவேற் லிமிட்டெட்
285C1/1, ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை, ஜூபிலி போஸ்ற், நுகேகொட.
தொலைபேசி இலக்கம்: 011 - 2854438, 0777 - 317043
திரு.ஏ.பீ.குணசேகரவைத் தொடர்புகொள்ள - 038 - 2232657, 038 - 2234154

(சி/45111)(24-19-45)


## பூரணை தின விழா

கொக்குவில் ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் புரட்டாதி பூரணை தினவிழா நாளை காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் இ.அருணகிரிவாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேச்சு, வீடியோப்படக் காட்சி, கண்காட்சி என்பவையும் இடம்பெறவிருக்கின்றன. (202)

## கொக்குவிலில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் கொக்குவில் மத்தி கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.


இம் மருத்துவ முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு நேருதாஜி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பொது வைத்திய கருத்தரங்கு, நீரிழிவு சிகிச்சை, இரத்த அழுத்த சிகிச்சை, கண்பரிசோதனை என்பவை இம் முகாமில் இடம்பெறும்.

டாக்டர்சிவச்செல்வனும் மருத்துவ பீட மாணவர்களும் இணைந்து இம் முகாமை நடத்துவர். (202)


## ஒன்பதாம் ஆண்டு நினைவில்

மண்ணில் 01 - 10 - 1939



விண்ணில் 16 - 09 - 1996

### அமரர் பூதர் இரத்தினம்

(ஓய்வுபெற்ற ஊழியர், கங்கேசன் சிமெந்து கூ.தாபனம், தெல்லிப்பூர் ஐக்கிய வாலிபர் சனசமூக நிலையத் தலைவர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்பு, அறிவு, பண்பு, பாசத்தின் மூலம்
வையத்துள் வாழ்ந்து காட்டிய எமது
அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஒன்பதல்ல
நாம் வாழும் காலம் வரை உங்கள் நினைவுகளும்
எம் கூடவே வாழும்.

துர்க்கா மில் அருகில்,
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

நினைவுகூரும்:
குடும்பத்தினர்.

(40036)(26-19-11)



## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றி, சிறந்த சேவை மனப்பான்மை மற்றும் திறமை காரணமாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராக உயர்வுபெற்ற

உயர்திரு.
### துரைசிங்கம் ரகு



அவர்கள் மேன்மேலும் பல பதவி உயர்வு பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/45136)(32-26-11-19)


தலைவர், பணிப்பாளர்கள்,
அங்கத்தவர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.



## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் தோமஸ்



ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஆசீர்வாதம் தோமஸ் அவர்கள் 12.09.2005 திங்கட்கிழமை தென் இந்தியாவில் காலமானார்.

அன்னார் எலிசபேத்தின் (மலர்) அன்புக் கணவரும் விஜயன், சந்திரன், மரீனா, செச்சில், ரஜனா, சுவாந்தன், அனிற்றா (வடிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09. 2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதித் திருப்பலிக்காக மெலிஞ்சிமுனை பரலோகராசா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கம், மெலிஞ்சிமுனை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ச.சவிரியான் (சகலன்).

மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை.

(40025)(32-26-11-19)

## 14.09.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200599855 இலிருந்து 200618136 வரை

சீட்டிழுப்பு இல. 1641

வெற்றி எண்கள்

**06 08 48 53** சுப்பர் எண் **14**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.**80,50,700/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 5 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 80,50,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 38 | 5,000/- | 1,90,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 487 | 1,000/- | 4,87,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,579 | 500/- | 7,89,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,767 | 40/- | 9,50,680/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,617 | 20/- | 4,52,340/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,37,784 | 10/- | 33,77,840/- |
| | | மொத்தம் | 82,47,360/- |
| [illegible] | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 87,47,360/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: **89,53,450/-**

| | |
|---|---|
| [illegible] | 200605796-3-24 |
| [illegible] | 200617484-0-11 |
| [illegible] | 200606742-1-17 |
| [illegible] | 200603908-9-40 |
| [illegible] | 200609183-6-81 |





(40044)(51)

சிவன் கோயிலடி, ஆவரங்கால்.

## 16-09-2005

ஆவரங்கால் சிவன்கோயிலடியைச் சேர்ந்த திரு.திருமதி தனுராஜ் - வாசுகி தம்பதிகளின் செல்வப் புதல்வி அர்ச்சனா தனது முதலாவது பிறந்த தினத்தை (16-09-2005) வெள்ளிக்கிழமை ஆவரங்காலில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, மாமா, அத்தை, அத்தான் (அச்சுவேலி), பெரியப்பா, பெரியம்மா, ஆசைபெரியப்பா(லண்டன்), சித்தப்பா (டோகா - கட்டார்), குட்டிச் சித்தப்பா மற்றும் அப்பப்பாமார், அம்மம்மாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி அர்ச்சனாவை சீருஞ் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
**இரத்தினம் குடும்பத்தினர்.**

## நவக்கிரக சாந்தி

கைதடிப் பிள்ளையார் கோயிலில் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் நவக்கிரக ஹோம சாந்திநடைபெறவுள்ளது. அடியார்கள் ஓமத்தில் பங்குகொண்டு கிரக தோஷங்களை நீக்கி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்கப் பட்டுள்ளனர். (9)


## பொருளியற் கல்லூரி நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

A/L DAY CLASS

சனி, ஞாயிறு பிரிவு

| | |
|---|---|
| Log. - R.P. சர்மா 12 - 1 | H.C. - ஜோதீஸ்வரன் 2 - 3 |
| Tam. - மீரா 1 - 2 | Gec. - குமரன் 3 - 4 |

வர்த்தகப் பிரிவும் ஏனைய கலைப் பிரிவுக்கான பாடங்களும் நடைபெறுகின்றன. (40065)(29-16-12)

## எச்சரிக்கை!

01.தபால்மூல கற்கைநெறிகள்
02.மின்சாதன பாதுகாப்புக் கையேடு

மார்க்கோணியின் இலத்திரனியல் மற்றும் செலுலார் தபால்மூல கற்கைநெறிகள் மற்றும் மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக் கையேடு என்னும் அண்மையில் வெளியிடப்பட்ட புதிய பரிமாணத்தில் அமைந்த அனைவருக்குமான நூல் என்பனவற்றை மீள்பதிப்புச் செய்தல், மாற்றி அமைத்து வெளியிடுதல், போட்டோ கொப்பி செய்தல், அனுமதியின்றி தமது மாணவர்களுக்கு வழங்குதல், மொழிமாற்றம் செய்தல், அனுமதியின்றி ஊடகங்களுக்குப் பயன்படுத்துதல், என்பனவற்றுக்கு எதிராக தேசிய புலமைச்சொத்து மற்றும் பதிப்புரிமை சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படும். சிலர் அண்மையில் இவ்வாறு செயற்படுவது கண்டறியப்பட்டதை அடுத்து இந்த பொது அறிவித்தல் விடப்படுகிறது.

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112 361362

## வழிகாட்டற் கருத்தரங்கு

எமது நிறுவனம் அனேக பெற்றோர்களினதும் மாணவர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க A/L 2005 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் மாணவர்களுக்கான சிறந்த ஒரு உயர்கல்வியை மேற்கொள்வதற்கான வழிகாட்டற் கருத்தரங்கு ஒன்றினை பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் என ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை பகல் 10மணிக்கு **IIS City Campus** இனால் இல.100, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள **IIS** பிரதான மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

உங்களது பரீட்சைப் பெறுபேறுகளுடன் உயர்கல்வி தொடர்பாக சிந்தித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக அமையுமென எதிர்பார்க்கிறோம்.

**அனைவரும் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P. No.: 021 222 8060

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
நியூபுகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த

**அன்பே ஆருயிரே**

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாதன்ஸ் சினிமா

சத்தியராஜ், சிவிராஜ், சுவா, வடிவேல் நடித்த

**மண்ணின் மைந்தன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

## மனோகரா யாழ்ப்பாணம்

சிம்பு, கோபிகா நடித்த

**தொட்டி ஜெயா**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ரவிகிருஷ்ணா, கோபிகா, ரேவதி நடித்த

**பொன்னியின் செல்வன்**

காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).


# மரண அறிவித்தல்கள்

## செல்லர் சின்னத்துரை (வாழையர்)



உடுவில், அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சின்னத்துரை அவர்கள் நேற்று (15-09-2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - குழந்தை தம்பதியரின் புதல்வரும் மற்றும் காலஞ்சென்ற இராசசிங்கம், காலஞ்சென்ற குட்டிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னையா, இரத்தினம், முருகேசு ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் தனேஸ்வரி, யோகேஸ்வரி, புவனேஸ்வரி (ஜேர்மனி), இரவீந்திரநாதன் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), ஜெயவீந்திரநாதன் (கனடா), குபேந்திரநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி.ஐயாத்துரை (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்), குணசேகரம் (ஜேர்மனி), இந்திரா (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), அனுசா (கனடா), தனுசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாமினி (ஆசிரியை), சர்மினி (ஆசிரியை), [illegible]ாகினி (மாணவி), கிரிசாந், கிரிசானி (ஜேர்மனி), பிரவீனா, பிரியந்தனா, பிறின்சிகா (பிரான்ஸ்), கௌரிகா, சோபிகா, அபிலாஸ் (பிரான்ஸ்), அஸ்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் கோயில் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.* (40049)(29-16-12)

தகவல்:
**சி.தனேஸ்வரி (மகள்).**

## திருமதி தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை 13-09-2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-09-2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி வடக்கு, கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாத்மா லேன்,*
*அளவெட்டி வடக்கு.* (40046)(29-16-12)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## ஸ்ரீபன் ஜோண்சன் பிறேமானந்த்



23/2,5ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபன் ஜோண்சன் பிறேமானந்த் அவர்கள் கடந்த 26.08.2005 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீபன் (இராசதுரை முன்னாள் வன ஒப்பந்தகாரர்) - சிசிலியா தம்பதியரின் கடைசிப் புதல்வனும் ஸ்ரெலா என்பவரின் அன்புக் கணவரும் பெயாறி என்பவரின் பாசமிகு தந்தையும் அரியராஜா (P.H.I.), நேசராணி, அரியமலர், அற்புதம், மெற்றில்டா, இதயராணி, செல்வராணி (சுவீடன்), பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பரிஸ் நகரில் பிரான்ஸ் நேரப்படி 5.15 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும் என அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23/2, 5 ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (40048)(29-16-12)

**தகவல்: சகோதரி**
**ராணி (குடும்பம்).**

# மரண அறிவித்தல்கள்

## குமரேசன் கஜேந்திரன்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசன் கஜேந்திரன் நேற்று (15.09.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2005) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குப்பிளான் வடக்கு,*
*ஏழாலை.* (40060)(29-16-12)

தகவல்:
**மா.ஜெகதீஸ்வரன்.**

## ஸ்ரீமதி ஈஸ்வரசாஸ்திரிகள் மீனாட்சி அம்மா



இந்தியாவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சிவன் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி ஈஸ்வரசாஸ்திரிகள் மீனாட்சி அம்மா நேற்று (15.09.2005) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற ஈஸ்வரசாஸ்திரிகள் அவர்களின் அன்பு மனைவியும் இலட்சுமி அம்மா, சீதாலட்சுமி அம்மா, காலஞ்சென்ற பார்வதி அம்மா மற்றும் கோமதி அம்மா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சிற்சபேசக்குருக்கள் (அராலி), பாலசுப்பிரமணியசர்மா (மீசாலை) மற்றும் இராமச்சந்திரசர்மா (மீசாலை) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அராலி தெற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருப்பிட்டி பிள்ளையார் கோயிலடி,*
*அராலி தெற்கு, அராலி.* (40058)(29-16-12)

தகவல்:
**ஸ்ரீமதி இ.சிற்சபேசக்குருக்கள் (மகள்).**

## செல்வநாயகம் செபஸ்தியாம்பிள்ளை

*(இளைப்பாறிய ஊழியர் - பரந்தன் இரசாயனக் கூட்டுதாபனம்)*



மிருசுவிலைச் சேர்ந்த செல்வநாயகம் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் 14.09.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் மேரி மாகிறேட் (றூபி) இன் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம், உதயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் றெனோஸின் (நியாப் - யாழ்.) அன்புத் தகப்பனும் வினோதினியின் அன்பு மாமனும் சந்திரமலர், வசந்தமலர், சின்னமலர் (இத்தாலி), அன்ரன் பிறான்ஸிஸ் (சுவிஸ்), தங்கமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மில்மிறட் மரியநாயகம் (கனடா), அல்பிறட் துரைராசு (கனடா), வினிவிறட் பெனடிற் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09.2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து, புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தவசிக்குளம்,*
*மிருசுவில்.* (40043)(29-16-12)

தகவல்:
**S.றெனோஸ் (மகன்).**

## காங்கேசன்துறையில் கைதானவர் கடற்புலி போராளி

யாழ்ப்பாணம்,செப்.16

காங்கேசன்துறை கடற்பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டவர் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவு போராளி என்று தெரிவிக்கப்படுகிறது.

படகில் ஏற்பட்ட இயந்திக் கோளாறு காரணமாக காங்கேசன்துறைக் கடற்கரையில் அப்படகு தரைதட்டியபோது ஸ்ரீலங்கா படையினரால் கைதுசெய்யப்பட்ட இவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வேலாயுதம் சமரக்கண்ணன் என்ற இந்தப் போராளி உளவுபார்க்க வந்தபோதே ஆயுதங்களுடன் தாம் அவரைக் கைதுசெய்ததாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

## தவறவிடப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் எஸ்.ரங்கராஜ் ஆகியோரிடமிருந்தும் தூதுக்குழுவினர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த முடிவுகளை அடுத்து பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களின் போராட்ட நடவடிக்கை இன்று வெள்ளிக்கிழமை முதல் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும் என்று பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களின் சங்கத் தலைவர் இ. அகிலன், தமிழர் ஆசிரியர் சங்கத்திடமும் மற்றும் அதிகாரிகளிடமும் உறுதி யளித்துள்ளார்.

இதேவேளை-

நிரந்தர நியமனத்தில் தவறவிடப்பட்ட அனைத்து பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களும் இன்று வெள்ளிக்கிழமை யாழ். வலயக் கல்வி அலுவலகம் முன்பாக வந்து தங்களது விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## ஹெல்பிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை தொடர்பான தமது முதனிலை அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக விசாரணை செய்து சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்குச் சட்டமா அதிபர் தங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார் என நீதிமன்றில் தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பொலீஸார் மேற்படி ஊழலில் தொடபுடைய 8 கோடி 29 லட்சத்து 58 ஆயிரத்து 247 ரூபா இருபது சதம் தொடர்பான வங்கிக் கணக்குகளை ஆராய்வதற்கு தமக்கு அனுமதியளித்து வங்கிகளுக்கு உத்தரவிடுமாறு நீதிமன்றத்தைக் கோரினர்.

சம்பந்தப்பட்ட கணக்குகள் பற்றி விடயங்களை அவர்களுக்குக் கொடுத்து உதவுமாறு சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு உத்தரவிட்ட நீதிவான், விசாரணைகளைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டார்.

(ஐ-க)

## சோமாலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரிசியை இறக்கும் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதாகவும் இன்னும் மூன்று நாள்களுக்குள் கப்பல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எல்லாளன் படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடப்பட்ட இப்பிரசுரங்கள் சமுதாயச் சீர்கேடுகளுக்குத் துணைபோவோர் மற்றும் அவற்றில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமைந்துள்ளன. (ஐ)

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் எனக்கும் கொலை அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. இதனால், மறைந்து வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தலைவரின் மறைவுக்குப் பின் கட்சிக்குச் சொந்தமான பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகளையும், தங்கத்தையும் சுருட்டிக் கொண்ட சோமவன்ஸ அமரசிங்கவும் அவரது சகாக்களும் ஜே.வி.பியை இனவாத போக்குடைய கட்சியாகத் திசை திருப்பிவிட்டனர்.

இவர்கள் முதலாளித்துவவாதிகளின் கைக்கூலிகளாகப் பல கொலைகளைச் செய்துள்ளனர். ஜனாதிபதியின் கணவர் விஜே குமாரதுங்க எனது நண்பர். அவரைக் கொலை செய்தவர் சோமவன்ஸ அமரசிங்க. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. விமல் வீரவன்ஸவுக்கு ஜே.வி.பியின் சரித்திரம் தெரியாது. கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது இந்த விமல் வீரவன்ஸ பிறந்தே இருக்கமாட்டார்.

எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்காத விமல் வீரவன்ஸ ஏதோ பத்திரிகைக்குச் செய்தி எழுதிக் கொண்டு ஜே.வி.பியுடன் ஒட்டிக் கொண்டவர். தனக்குப் படிப்பித்த பாடசாலை அதிபரைக் கொலை செய்துவிட்டு கொழும்புக்கு ஓடி வந்தவர்தான் இவர். இவர்களுடைய காலத்தில்தான் கொலைக் கலாசாரம் தலைவிரித்தாடியது. தென்பகுதியில் அரசியல்வாதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், புத்திஜீவிகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் என எல்லோரையும் கொன்றுகுவித்தனர். இவர்களால் கொலைசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தையும் கடந்துவிட்டது.

ஜே.வி.பியின் பெயரால் போலித் தலைவர்களாக நடமாடும் இவர்கள் முதலாளித்துவத்தை மேடைகளில் கண்டித்துக் கொண்டே ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் சுகபோகம் அனுபவிக்கின்றனர். பஸ்ஸில் செல்வதற்கே திண்டாடிய இவர்கள் இப்பொழுது இண்டர்கூலர் சொகுசு வாகனங்களில் சுற்றித் திரிகின்றனர். சோமவன்ஸவும், வீரவன்ஸவும் தமக்கும் தமது குடும்பத்தவர்களுக்கும் சொத்து சேர்ப்பதிலேயே குறியோடு இருக்கின்றனர். பொதுவான அரசியல் கொள்கையோ நோக்கமோ அவர்களிடம் இல்லை. ஜே.வி.பியின் பெயரை வைத்துக்கொண்டு இவர்கள் கட்சி ஆதரவாளர்களைத் தவறான வழிக்குத் திசை திருப்புகின்றனர். இதற்கு நாம் இடம்கொடுக்க முடியாது. ஜே.வி.பி. போலித் தலைவர்களின் முகமூடியைக் கிழித்து உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவதே எமது நோக்கம்.

-இப்படி வன்முறைகள் அற்ற விடுதலைப் பாதையில் ஜே.வி.பி. என்ற அமைப்பின் தேசிய, சர்வதேச அமைப்பாளர் டாக்டர் சுபாஸ் சந்திர பெர்ணாண்டோ கூறுகின்றார். (ஐ-க)

# சமஷ்டி முறைக்கு மாறுவதுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி.....' என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் அவர் உரையாற்றினார்.

அந்த நீண்ட உரையின் இறுதிப் பகுதி பின்வருமாறு அமைந்தது:-

இலங்கையில் நாம் திடமாக எதிர்கொள்ளும் இரண்டு சவால்கள் பற்றிக் குறிப்பிட்டு எனது உரையை நிறைவுசெய்ய விரும்புகிறேன்.

அவை- இலங்கை நாட்டையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் மாற்றுவது பற்றியனவாகும்.

என்னுடைய உரையில் நான் விவரமாகக் குறிப்பிட்டபடி எல்லா சமூகத்தினரது நலன் குறித்தும் சிரத்தை கொள்ளத்தக்கதாக - அந்த விடயத்தை உள்ளடக்கத்தக்கதாக - நாட்டை நாம் மாற்றியமைக்கவேண்டும்.

நாட்டின் ஒற்றை ஆட்சியை பல்லினத் தன்மை கொண்ட, சமஷ்டி முறைக்கு மாற்றுவதையும் உள்ளடக்கியதே இது என்பது என்னுடையதும், எனது நாட்டின் பெரும்பான்மைப் பிரிவினரதும் கருத்தாகும்.

இலங்கை தேசத்தை இவ்வாறு மாற்றியமைக்கும் முன்னரங்க முயற்சிகளில், நாடாளுமன்றப் பிரேரணை மூலமும், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கலந்துரையாடல்கள் மூலமும் நானும், எனது கட்சியும் முழு மூச்சாக ஈடுபட்டு வந்துள்ளோம்.

இலங்கை நாட்டை ஒற்றை ஆட்சியிலிருந்து சமஷ்டி முறைக்கு மாற்றுவதன் மூலம் தமிழ் சமூகத்தையும், முஸ்லிம் சமூகத்தையும் அதற்குள் கொண்டுவர முடியும். ஆனால், அதுமட்டும் நிரந்தரமான தீர்வைக் கொண்டு வந்துவிடாது.

சமாதானத்தை எட்டுவதற்கு அதேயளவுக்கு இரண்டாவது விடயத்துக்கும் - சவால்களைப் புறக்கணித்து - நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அது - பயங்கரவாதத்தையே தவறாமல் பின்பற்றுகின்ற - சர்வாதிகார, கொடூரப் போக்குடைய - குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை, அதன் தரப்புக் கருத்துகள் செவிமடுக்கப்படுவதற்கு வன்முறையை நாடாமல், நாட்டோடு தொடர்புபடக் கூடிய அரசியல் சக்தியாக மாற்றுவதாகும்.

இந்த விடயங்கள் புலிகளோடு சேர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு, ஒழுங்குமுறைப்படி கவனிக்கப்படவேண்டும்.

இலங்கை நாட்டை மாற்றியமைப்பதில் புலிகளுக்கு உள்ள பங்குரிமை போல, புலிகளை மாற்றியமைப்பதில் சகல இலங்கையருக்கும் பங்குரிமைப் பொறுப்பு உண்டு.

இந்த இரட்டை மாற்றத்தை (நாட்டின் ஆட்சி முறையையும் மாற்றி புலிகளையும் மாற்றும் நடவடிக்கையை) மேற்கொள்வதில் உள்ள சவால்களை எதிர்கொள்வது இலங்கையில் ஒரு தனிக் கட்சியால் அது எவ்வளவு வலுக் கொண்டிருந்தாலும் கூட தனித்து முகம் கொள்ளக் கூடியதல்ல.

அதற்கு நாட்டில் உள்ள பிரதான கட்சிகள் மற்றும் குழுக்களிடையே பரந்த இணக்கப்பாடும் இணைச் செயற்பாடும் அவசியமாகும் - என்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் என்று குறிப்பிட்டு, லஷ்மன் கதிர்காமர் கொலை முதல் பல்வேறு விடயங்களை இந்த உரையில் வெளியிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான சமாதான முயற்சிகளுக்குள் விடுதலைப் புலிகளை ஈடுபட வைப்பதற்கான உண்மையான அழுத்தத்தை சர்வதேச சமூகம் கொடுக்கவேண்டும் என்றும் கோரினார்.

''இலங்கையின் அரசியல் அட்டவணைப்படி அமைதி முயற்சிகளை மீளாய்வு செய்வதற்கான மிக உகந்த தருணம் இதுதான். இன்னும் சில மாதங்களில் புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்படவிருக்கிறார். அமைதி நடவடிக்கைகளை முன்நகர்த்துவதற்கான புதிய முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிட்டும். எனவே, அந்த சமாதான எத்தனங்கள் எப்படி அமையக்கூடும் என நான் இப்போது ஓரளவு பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கும்.''- என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

1994இல் தமது அரசு பதவிக்கு வந்த பின்னர் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண எடுத்த முயற்சிகளை விலாவாரியாக விவரித்த ஜனாதிபதி, 2002 பெப்ரவரியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விதந்துரைக்கவும் தவறவில்லை.

''இந்த ஒப்பந்தத்தில் உள்ள சில ஷரத்துகள் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படுத்துவனவாக உள்ளபோதிலும், அமைதியை பொறுத்த மட்டில் ஒட்டுமொத்தத்தில் சாதகமான நிலையையே அது ஏற்படுத்தியுள்ளது. பல உயிர்களை அது காப்பாற்றியுள்ளது என்பது ஒரு முக்கிய அம்சம். நாட்டு மக்களுக்கு - குறிப்பாக பிணக்குக்குரிய வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு - முன்னர் இருந்ததைவிட சுயாதீனமாக விவசாயம்செய்து, மீன்பிடித்து, தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வாழ அது வழியேற்படுத்தியுள்ளது. மாணவர்கள், வர்த்தகர்கள், சமூகத் தலைவர்கள், அரச ஊழியர்கள் என மக்களுக்கிடையில் பரிமாற்றங்களுக்கு அது உதவியது. அரசியல்வாதிகளுக்கு அவர்களது சக பிரஜைகள் - குறிப்பாக பாதிக்கப்பட்ட பிரதேசமக்கள் - எப்படி வாழ்கின்றார்கள் என்பதை நேரில் கண்டறிய யுத்தநிறுத்தம் நல்ல வாய்ப்பை வழங்கியது.

''அத்தோடு முக்கியமான முடிவுகளை எடுக்கவும், அமைதிக்கான பாதையை வகுத்துத் தீர்மானிக்கவும் வழிசெய்த சமாதானப் பேச்சுகளுக்கு - அவற்றை முன்னெடுப்பதற்கு - உகந்த சூழ்நிலையை இந்த யுத்தநிறுத்தம் ஏற்படுத்தித் தந்தது.

''இவ்வாறு யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதால் கிட்டிய முக்கியமான - முன்னேற்றகரமான - தன்மைகளைத் தாண்டி இப்போது மீண்டும் வன்முறை வெடிக்கக்கூடிய களைப்பான நிலைக்கு வந்திருக்கிறோம்.

''இதற்கு புலிகளின் யுத்தநிறுத்த மீறல்களே முக்கிய காரணம்.''- என்றும் ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் பேணல், யுத்தத்தால் பாதிப்புற்ற பகுதிகளின் அபிவிருத்தி ஆகியவை உட்பட பல விடயங்களை தமது இந்த நீண்ட உரையில் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு தாம் ஏன் வந்தார் என்பது உட்பட பல விடயங்களை இந்த உரையில் அவர் விளக்கினார். (ஐ)

## முஸ்லிம் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து இவ்விரு கட்சிகளும் எழுத்துமூல உத்தரவாதத்தை தராதமையினால் தமது கட்சி இம்முடிவை எடுத்துள்ளதாகவும் அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் மற்றும் தேவைகளை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி தனித்துப் போட்டியிடுவது தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு அடுத்தவாரம் நடத்தப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (ஐ-க)

BRIGHTMAN
நாவலர் வீதி,
யாழ் நகர்.
A/L கணித,
உயிரியல் பிரிவு
PAPER CLASS
PHY:. திரு. ஜெயசீலன்
CHE: திரு. டயஸ்
C.M. திரு. துரையப்பா
Bio:.
திரு. பொன். திவாகரன்
ஆரம்பம்:
17.09.2005.
(Sat.10.30.a.m.)
(39983)

A/L DAY CLASS
வர்த்தகப்
பிரிவு ஆரம்பம்
17-09-2005 சனி
மாலை 4.30.
பொருளியல் ;-
P.மோகன
கணக்கீடு-
S.S.சீலன்
வணிகக் கல்வி-
பிரபல ஆசிரியர்.
பிரிவு-I-திங்-வெள்ளி
7.30-9.00
பிரிவு-II-திங்-வெள்ளி
4.00-5.30
வர்த்தகக் கல்லூரி
(39987) சங்கானை.

கணக்கீடு
திரு.பாலவாசன்
A/L 2007
கட்டுப்பாட்டுக்
கணக்கு
Sat., Sun.
8.30 - 9.30 a.m.(N.T.)
செப்ரெம்பர் 17
(40059)
விக்னா கல்வி
நிறுவனம்

CHEMISTRY/BRIGHTMAN
DIAS B.sc.(Hons)spl.chem. நாவலர் வீதி
2007-A/L
வெப்ப இரசாயனம்
sa., su., we.3.30
Repeat (39962)
Model paper
sa., su., 12.00

SCIENCE CENTRE
நெல்லியடி
A/L DAY CLASS
(40015)
Maths - ஜெயந்தன் Che. - அன்பழகன்
Bio. - அல்போன்ஸ் Phy. - பிரபா

THE LEADING INDIAN IT COLLEGE
GLOBAL VILLAGE
COMPUTER EDUCATION
INDIA - SRI LANKA
அனைத்து Diploma
கற்கைநெறிகளுக்குமான
புதிய பிரிவுகள்
ஆரம்பம்!!!
50% OFF
INTERNET & E-MAIL 1,000/=
(1 WEEK ONLINE CLASS)
OFFICE AUTOMATION
DESKTOP PUBLISHING
PHOTO MIXING 2,500/=
PROGRAMMING
HARDWARE
MULTIMEDIA 22,500/=
(ONE YEAR - 6 COURSES)
HIGHER DIPLOMA IN
AUTOCAD 6000/=
ஆரம்பம்: 17,18,24,25 -09-2005
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
021-4590222 etouch@wow.lk

SRI SOMASKANDA COLLEGE PUTTUR
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின்
பழைய மாணவர்களே!

கல்லூரியின் பவளவிழாவையொட்டி பவளவிழாச் சஞ்சிகை அடுத்த ஆண்டில் வெளியிடப்பெற இருக்கிறது.

அறிவுச் செல்வத்தைப் பெற்ற கல்லூரியின் செல்வங்களை ஒருசேர ஆவணப்படுத்தும் நன்நோக்குடன் உங்கள் விவரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளோம். பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய உங்கள் விவரங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

* தங்கள் முழுப் பெயர்:
* கல்லூரியில் கல்வி கற்ற காலப்பகுதி:
* தங்கள் கல்வித் தகைமை:
* தொழில்:
* இளைப்பாறியவராயின் மேற்கொண்ட தொழில்:
* முகவரி:
* தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்கள்:

(தங்கள் பாடசாலைக் கால அனுபவங்கள், சகபாடிகள் பற்றிய விவரங்கள் முதலியவற்றையும் குறிப்பிட்டு உதவவும்)

முக்கிய விவரங்கள் பவளவிழாச் சஞ்சிகையில் ஆவணப்படுத்தப்படும்.
தங்கள் விவரங்களை 15.10.2005 இற்கு முன் அனுப்பி உதவவும்
இத்தகவலை ஏனைய எங்கள் பழைய மாணவர்களுக்கும் தெரியப்படுத்தவும்.
உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
Mr.V.Arumugam, Principal, J/Sri Somaskanda College, Puttur, Jaffna, Sri Lanka
தொலைபேசி 021 4581644 அல்லது 021 4581660 (இரவு வேளைகளில்/ அதிபர் இல்லம்)
E-mail: Puttursse@yahoo.com
-பவளவிழாச் சஞ்சிகைக் குழு.
(அ-45105)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.